Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 08 (03.12.2003) புதன்கிழமை இதழ்:64

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட, உள்ளூர், வெளியூர் துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல. 46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி.
T.P.021-222-7310

# புலிகளுடனான பேச்சுக்கள் தாமதமாவது ஆபத்தானது

## பட்டி வீரக்கோன் எச்சரிக்கை!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எந்தக் காரணம் கொண்டும் தாமதிக்க இடமளிக்கக் கூடாது என்று, லங்கா சமசமாசக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து லங்கா சமசமாசக் கட்சியின் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளால் சமாதானப் பேச்சுக்கள் தாமதம் அடைவது ஆபத்தானது.

ஜனாதிபதியும், பிரதமரும் இணங்கிப்போகும் புதிய கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட்டு, அரசியல் நெருக்கடி தீர்க்கப்படவேண்டும். இதன் மூலம் சமாதானப்பேச்சுக்கள் தொடர வழிவகுக்கப்படவேண்டும்.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவக் கட்டளை அமைப்பில் ஜனாதிபதியால் மீண்டும் மாற்றம்!

## யாழ். தளபதியாக சுசில் சந்திரபால

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட பின்னர்- ஒரு மாத காலத்துக்குள் இரண்டாவது தடவையாக இராணுவ கட்டளை அமைப்பில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.


முன்னைய மாற்றத்தின்படி, யாழ். குடாநாட்டுக்கான இராணுவக் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் பரமி குலதுங்கவுக்குப் பதிலாக - மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது வன்னிப் பிராந்திய கட்டளை அதிகாரியாகப் பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, முன்னர் யாழ். குடாநாட்டுக்கான பிரதிக் கட்டளை அதிகாரியாகவும், பதில் கட்டளை அதிகாரியாகவும் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, புதிதாக இடம்பெற்றுள்ள மாற்றங்களின்படி, மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க இராணுவ அதிகாரிகளுக்கான பொதுக் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ். குடாநாட்டுக்கான படைத் தளபதி (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



நிலவைப் பார்த்து நாய் குரைக்கத் தொடங்கப்போது போல

# சிங்கள இராணுவம் என்ற பெயரில் சிஹலஉறுமய படைக்கு ஆட்சேர்ப்பு!

## முதற் கட்டத்தில் 100 பேருக்கு பயிற்சி

(கொழும்பு)

**"சிங்கள இராணுவம்" என்ற அமைப்பைத் தோற்றுவித்து - சிங்கள இளைஞர் யுவதிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையில் சிஹல உறுமய ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.**

சிங்கள இராணுவம் என்ற தமது படைப்பிரிவில் இணைந்துகொள்ள முன்வருமாறு சிஹல உறுமய - சிங்கள இளைஞர் யுவதிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

தமது இந்தப் படைப்பிரிவில் 18 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் இணைந்து கொள்ளலாம் என்று, அறிவித்துள்ள சிஹல உறுமய, முதற் கட்டமாக இந்தப் படைப்பிரிவில் 100 பேர் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இந்தப் படைப்பரிவில் இணைந்து கொள்ள முன்வரும் இளைஞர்களுக்கு முதலில் அரசியல் போதனையும் சிங்கள இனத்தின் தொன்மை மற்றும் வரலாற்றுப் பெருமை குறித்தும் விரிவாக விளக்கமளிப்பதற்கான விரிவுரைகள் நடாத்தப்பட இருப்பதாவும் சிஹல உறுமய அறிவித்துள்ளது.

ஆனால், இந்தப் படைப்பிரிவு அமைக்கப்படுவதன் நோக்கம் குறித்து சிஹல உறுமய கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை, முன்னர் விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணிக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் திட்டவரைபு பேச்சுக்கு அடித்தளம்!

## மிலிந்த மொறகொட தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகம் குறித்த யோசனை புதிய பேச்சுவார்த்தை ஒன்றுக்கு அடித்தளமிட்டுள்ளது.

இவ்வாறு பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்வு காண்பதற்கு அரசாங்கம் சமாதான முயற்சியை முன்னெடுத்து வருகிறது.

இதற்கு விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான புதிய யோசனை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் இந்த யோசனை வரலாற்றில் முதற் தடவையாக முன்வைக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத் தேர்தலுக்குத் தயாராவதென ஐ.தே.க.நிறைவேற்றுக்குழு தீர்மானம்!

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை அடுத்து, பொதுத்தேர்தல் ஒன்றுக்குத் தயாராக இருப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுச்சபை தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் நேற்று நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு - சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் அங்கீகாரமளித்தனர்

சமாதான முயற்சியை அரசு முன்னெடுத்துக்கொண்டிருந்தவேளை- ஜனாதிபதி அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி முக்கிய மூன்று அமைச்சுக்களைப் கைப்பற்றியிருந்தார்.

இதனால், சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லாமையால், சமாதான முயறசிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டது.

இதனால், மக்கள் அங்கீகாரத்தை மீண்டும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# கிண்ணியா நிலைவரங்கள் குறித்து நேற்றைய கூட்டத்தில் ஆராய்வு!

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் நிலவும் பதற்ற நிலை தொடர்பாகவும் அந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்தமக்களுக்கான நிவாரண விநியோகங்கள் வழங்குவது தொடர்பாக, நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் திருகோணமலை மாவட்டக் கிளையில் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 1.00 மணிக்குத் தொடங்கிய இந்தக் கூட்டம் மாலை 2.30 மணிவரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் திருமலை மாவட்ட அரச அதிபர் காமினி ரொட்ரிக்கோ, கிண்ணியா பிரதேச செயலர் முகமது செரீன் மற்றும் திருமலை மாவட்ட தொண்டர் நிறுவனங்களின் இணையத் தலைவர் சு.தவசிலிங்கம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் திருமலைக் கிளைத் தலைவர் டாக்டர் ஞானகுணாளன், படைத் தரப்பில் திருமலை மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், ஏ.எஸ்.பி.சமரக்கோன், சிவில் இராணுவ இணைப் பதிகாரி (10 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் தொடரும் சம்பவங்களுக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்!

## இந்தியாவிலிருந்து அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்கு அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயலே காரணம் என - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு தற்போது விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் ஹக்கீம், அங்கிருந்து ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், அவர் வலியுறுத்தினார்.

கிண்ணியாவிலும் அதன் சுற்றுப்புறங்க (10 ஆம் பக்கம் பார்க்க)

# முடிவேதும் எட்டப்படாத நிலையில் ஜனாதிபதி-ஜே.வி.பி. பேச்சுமுடிவு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டிணைவு ஒப்பந்தத் திகதி, நிர்ணயம் மேலும் காலதாமதமாகியுள்ளது.

நேற்றுக்காலை ஜனாதிபதி மாளிகையில், ஜே.வி.பியின் செயலர் டில்வின் சில்வாவுக்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று ஒப்பந்தம் கைச்சாத்திட இருந்த போதிலும், ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில், ஜே.வி.பியினருக்கு ஏற்பட்ட சந்தேகத்தினாலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் தான் நடத்தும் பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பியினருக்கு விளக்கமளித்த போதிலும் இரு கட்சிகளுக்குமான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இருகட்சிகளும் சந்தித்துக் கலந்துரையாடுவதென கூட்டமுடிவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. (01)

EXPOAIR your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 0114512666 0112360290 0112360291
email . jaffna @ expoavi . com.
(சி -1845)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# நல்லூர் பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளிற்கு கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் (ICTAD) தரம் 9 பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்கள் 3.12.2003 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 11.12.2003 ஆம் திகதி வியழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை உரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறும், சீல்வைத்த கேள்விகளை 12.12.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறும், தங்கள் கேள்விகளின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபைக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியில் இடவும். மறுபிரதியை பிர/உ.உ ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் - அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | வேலை விபரம் | கேள்விவைப்பு கட்டணம் | கேள்விப் பத்திர கட்டணம் (பெறுமதிசேர் வரியுடன்) |
|---|---|---|---|
| 01. | குமரகோட்டம் நெட்டிலிப்பாய் வீதி கல்லிட்டுதாரிடல். | 3000/- | 300/- |
| 02. | கோணாவளை கலைவாணி வீதி கல்லிட்டுதாரிடல். | 11000/- | 300/- |
| 03. | கேணியடி வீதி கல்லிட்டுதாரிடல் வேலை | 1500/- | 300/- |
| 04. | பொன்னையா வீதி கல்லிட்டுதாரிடல் | 1000/- | 300/- |
| 05. | பிடாரிகோவில் வீதி கல்லிட்டுதாரிடல் வேலை | 5000/- | 300/- |
| 06. | நவீன சந்தை நீர்த்தாங்கி வேலை | 7000/- | 300/- |
| 07. | திருநெல்வேலி பொதுச்சந்தை திறந்த மண்டபம் அமைத்தல் | 17000/- | 300/- |

நல்லூர் பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
திருநெல்வேலி, 02.12.2003

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(சி-1858)

X'MAS & NEW YEAR SALE
நத்தார், புதுவருட மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மார்கழி 1ஆம் திகதியிலிருந்து மார்கழி 31 ஆம் திகதி வரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

லைடன் புடவை நிலையம்

(பஸ் நிலையம் எதிர்)

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2222381

சகல பொருட்களுக்கும் விசேட கழிவுண்டு

(சி/1841)

# மின்கட்டண விபரங்களை யாழ்ப்பாணத்தில் பதிய ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் யாழ்.மாவட்டத்தில் அறவிடப்படும் மின் கட்டணங்களின் விபரம் உடனுக்குடன் கிடைக்கும் என இலங்கை மின்சாரசபையின் யாழ். மாவட்ட அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டத்தில் மக்களால் செலுத தப்படும் மின்கட்டணங்களின் விபரங்கள் காலம் தாழ்த்தியே அவர்களுக்குக் கிடைப்பது தொடர்பாகக் கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தற்போது யாழ். மக்கள் செலுத்தும் மின்கட்டண விபரங்கள் யாவும் கொழும்பிலுள்ள இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்திற்குச் சென்று, விபரங்கள் பதியப்பட்ட பின்னரே அனுப்பிவைக்கப்படுகின்றன.

இதனால் வங்கிகளில் செலுத்தப்படும் மின்கட்டணங்கள் ஒரு மாதகால இடைவெளியிலும், தபாலகங்களிலிருந்து கட்டண விபரங்கள் செல்வதற்குக் காலதாமதம் ஏற்படுவதால், தபாலகங்களினூடாகச் செலுத்தப்படும் கட்டண விபரங்கள் சில மாத காலத்தின் பின்னரும் மக்களைச் சென்றடைகின்றன.

ஆனால், மக்களால் செலுத்தப்படும் கட்டணங்கள் எப்படியும் எம்மிடம் வந்துசேரும். அது குறித்து யாரும் கவலை அடையத் தேவையில்லை. ஆனாலும், இது தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய சந்தேகங்கள், பிரச்சினைகளைத் தவிர்க்கும் பொருட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் யாழ். மாவட்டத்தில் இலங்கை மின்சாரசபையின் கணக்குகளைப் பேணுவதற்கான தனியான அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டு கணனிப்பதிவுகள் மூலம் உடனுக்குடன் மக்கள் வங்கிகளினூடாகச் செலுத்தும் கட்டண விபரங்களை வழங்கவுள்ளோம், எனவும் மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ப)

## உதவிப் பிரதேச செயலர் நியமனம்

யாழ். பிரதேச செயலகத்திற்கு, உதவிப் பிரதேச செயலராக செல்வி எஸ்.பிரபா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனம் நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.பிரதேச செயலகத்தில் கலாசார அலுவலராகக் கடமையாற்றிய திருமதி எழிலரசி யோகநாயகம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்திற்கு உதவிப்பிரதேச செயலராக நியமனம் பெற்றுள்ளார். (ப)

## ஓய்வூதியம் தொடர்பாக செயலகத்தில் கணிப்பீடு

வடக்கு, கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன ஓய்வூதியம் தொடர்பான கணிப்பீடொன்றினை நடத்தவுள்ளது.

யாழ்.செயலகத்தில் எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்கத்தைச் சேர்ந்தோர் பங்குபற்றவுள்ளனர். (ப)

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2004

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட கீழக்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகளை 01.01.2004 முதல் 31.12.2004 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக்கட்டணம் - ரூபா 300/- (வற் உட்பட)

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி - 11.12.2003 ஆந் திகதி வியாழக்கிழமை பி.பகல் 3.00 மணிவரை

கேள்விகள் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி - 12.12.2003 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 12.30 மணிவரை.

கேள்விகள் திறக்கும் திகதி - 12.12.2003 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி.

### விபரம் வருமாறு

| சந்தைகள் | கேள்விப்பிணைப் பணம் (மீளளிக்கக்கூடியது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தெகை (வற் நீங்கலாக) |
|---|---|---|
| 01. மீன்சந்தை - பண்ணை | 10000/- | 1905400.00 |
| 02. பெரியகடை மரக்கறிச்சந்தை | 10000/- | 648500.00 |
| 03. குருநகர்ச் சந்தை | 10000/- | 1058000.00 |
| 04. செங்குந்தா சந்தை | 10000/- | 529200.00 |
| 05. பாசையூர்ச் சந்தை | 2500/- | 44000.00 |
| 06. புங்கன்குளம் சந்தை | 2500/- | 16500.00 |
| 07. கொழும்புத்துறைச் சந்தை | 1000/- | 3300.00 |
| **இறைச்சிக்கடைகள்** | | |
| 01. குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 5000/- | 282000.00 |
| 02. குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல. 3 | 5000/- | 193700.00 |
| 03. குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல. 5 | 5000/- | 166900.00 |
| 04. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை இல. 7 | 2500/- | 10500.00 |
| 05. நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 5000/- | 305000.00 |
| 06. பண்ணை கருவாட்டுக்கடை இல. 3 | 2500/- | 20400.00 |
| 07. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 1 | 2500/- | 66000.00 |
| 08. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 2 | 2500/- | 53600.00 |
| 09. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 5 | 2500/- | 10500.00 |
| 10. புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை இல. 1 (இதற்கான கடையை குத்தகைக்காரரே அமைக்க வேண்டும்) | 2500/- | 40400.00 |
| 11. நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல. 10 | 2500/- | 6800/- |
| 12. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 07 | 2500/- | 10700/- |
| 13. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 08 | 2500/- | 6100/- |
| 14. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 09 | 2500/- | 6100/- |
| 15. நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.11 | 1000/- | 3900/- |
| 16. நாவாந்துறை கருவாட்டுக்கடை இல.12 | 1000/- | 3900/- |

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003.12.01

இ. இராமலிங்கம்,
மாநகர் ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-1855)

ராஜா யாழ்ப்பாணம்.

சில தினங்கள் மட்டும்

சிலம்பரசன், ஷர்மி நடித்த

காதல் அழிவதில்லை

காட்சிநேரம் :10.30, 2.30, 6.30 (பு.நே)

2 FAST 2 FURIOUS

இரவு 9.30 மட்டும்

(சி-1847)

நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், ஜோதிகா நடித்த

திருமலை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

2 FAST 2 FURIOUS

(சி-1846)



திருகோணமலை தலைமைப் பொலிஸ் காரியாலயத்தில் - முஸ்லிம், தமிழ், பிரமுகர்களுக்கும் படைத்தரப்பினர் மற்றும் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம்.

# கண்ணிவெடி அகற்றும் பணிக்கு இஸ்ரேலியர் இருவர் வருகை!

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ள, இஸ்ரேலியர்கள் இருவர் இங்கு வந்துள்ளனர்.

சாமுரல் ஈரம், ஹனோச் பாலேவி ஆகிய இருவருமே இங்கு வந்துள்ளவர்கள். இதில் சாமுரல் ஈரம் என்பவர் - இஸ்ரேலில் இயங்கும் எல்லைகளற்ற அமைப்பு எனும் நிறுவனத்தில் இணைந்து செயற்படுபவர். தற்போது கொசோவாவிலிருந்து இங்கு வந்துள்ளார். இவர் அங்கோலா, எரித்திரியா மற்றும் எதியோப்பியா ஆகிய நாடுகளில் வேலைசெய்த இவர், தற்போது இலங்கைக்கு வந்துள்ளார். இவர் இங்கு ஐரோப்பிய நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றல் தொடர்பில் அவர்களுக்கு உதவுவதுடன், கண்ணிவெடி அகற்றுபவர்களுக்கான பயிற்சிகளையும் வழங்கிவருகிறார்.

பாலேவி - யுனிசெப்பின் கண்ணிவெடி அகற்றும் திட்ட இணைப்பாளராகக் கொழும்பிலுள்ள அலுவலகத்தில் பணியாற்றுகிறார். இவர் யுனிசெப்பில் கடந்த ஏழு வருடங்களாக பணியாற்றிவருகிறார். அத்துடன், அங்கோலா, எரித்திரியா ஆகிய நாடுகளிலும் வேலைசெய்துள்ளார். தற்போது இலங்கையில் பணிபுரியும் இவர், உள்நாட்டு கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களுக்கு - வெடிக்காத வெடிபொருட்களை எவ்வாறு கையாள்வது, அதனை மீட்பது தொடர்பான கடினமான பயிற்சிகளை வழங்கிவருகிறார்.

## ஜே.வி.பியினர் நேற்றுமுதல் மக்கள் சந்திப்பில்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி இன்றுமுதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நாடுமுழுவதும் பத்தாயிரம் மக்கள் சந்திப்புக்களை நடத்தவுள்ளதாக முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் 'நாட்டை சரியான பாதைக்கு இட்டுச்செல்ல எம்முடன் இணையுங்கள்' என்ற தொனிப்பொருளில் இந்த மக்கள் சந்திப்புகள் நடைபெறவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிப்பதற்காகவே இந்த மக்கள் சந்திப்புக்கள் நடத்தப்படுகின்றன. இந்த சந்திப்புகளில் மக்கள் விடுதலை முன்னணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர். இதன்போது, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த 20 இலட்சம் துண்டுப்பிரசுரங்கள்- மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலித்தேவன் தலைமையிலான குழுவினர் நெல்சன் மண்டேலாவைச் சந்திக்கவுள்ளனர்

(கொழும்பு)

**தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான குழுவினர்- தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவை சந்திக்கவுள்ளனர்.**

கடந்த சில நாட்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவின் அரசியலமைப்புக் குறித்து ஆராய்வதற்காக, புலித்தேவன் தலைமையிலான குழுவினர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தனர். இதன்போது இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதிகள் உட்பட பலரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர். ஒரு வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு, தென்னாபிரிக்கா சென்றுள்ள இவர்கள் - முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவைச் சந்தித்த பின்னரே நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு எதிராக, ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக நோர்வே தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றது என்று, நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர்மீது, ஜனாதிபதி குற்றம் சுமத்தியதையடுத்து, அவரை நோர்வே அரசாங்கம் விளக்கம் கொடுப்பதற்காக நோர்வேக்குத் திருப்பியழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நோர்வே சென்றுள்ள யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர், இதுவரை கொழும்பு திரும்பவில்லை. அவர் தொடர்ந்தும் நோர்வேயில் தங்கியுள்ளார். இந்த நிலையிலேயே தொடர்ந்தும் தாம் இவ்விடயம் குறித்து ஆராய்ந்து வருவதாக நோர்வே தெரிவித்துள்ளது.

## போதைப்பொருள் வைத்திருந்த யாழ்.வாசி கைது

(சென்னை)

ஹெரோயின் போதைவஸ்து வைத்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை, தமிழகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேவன் என்று அழைக்கப்படும் வி.சந்திரகாந்தராஜா (வயது 38) என்பவரே கைதானவராவார். இவர் 1.2 கிலோ எடையுள்ள போதைப் பொருளை வைத்திருந்தபோதே கைதானார்.

## சுகாதாரப் பணியாளர்கள் 4 மணிநேர வேலைநிறுத்தம்

சுகாதாரப் பணியாளர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்க்கக் கோரி கடந்த மூன்று நாட்களாக நான்கு மணிநேர வேலைநிறுத்தம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி காலை 8மணி முதல் 12 மணிவரை இந்த வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெற்றுவருவதாகத் தெரியவருகின்றது. (01)

# பொ.ஐ.மு.தலைவர்களுக்கான கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நடைபெறும்

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம்வகிக்கும் கட்சித் தலைவர்களது கூட்டம் - நாளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில்- ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையில் நடைபெற்றுவரும் தேர்தல் கூட்டு தொடர்பான பேச்சுவார்த்தை குறித்து ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஜே.வி.பியுடன் தேர்தலில் கூட்டிணைந்து போட்டியிடுவது தொடர்பாக, சிறிலங்கா சுதந்திரக்கட்சி தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது. கூட்டிணைவதற்கான திட்டம் ஒன்றையும் சுதந்திரக்கட்சியினர் தயாரித்து, ஜே.வி.பியினரிடம் வழங்கியுள்ளனர்.

இவ்விடயம் குறித்தும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களது கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நல்லிணக்க அரசாங்கம் குறித்து பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்ற சூழ்நிலையிலேயே, ஜே.வி.பியினருடன் தேர்தல்கூட்டு குறித்துப் பேசிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் கூட்டிணைப்புத் தொடர்பாக, சிறிலங்கா சுதந்திரக்கட்சியினால் வழங்கப்பட்ட திட்டவரைபினை ஆராய, தமக்கு ஒரு மாதகால அவகாசம் தேவையென ஜே.வி.பியினர் தெரிவித்தனர். ஒருவார காலத்துக்குள் இதுகுறித்து ஆராய்ந்து பதிலளிக்குமாறு, சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பியைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஐ.ரி.என், லக்கண்ட ஒலிபரப்பு சேவைகளை தனியார் மயப்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானம்

நாட்டிலுள்ள ஐ.ரி.என். ஒளிபரப்புச்சேவை மற்றும் லக்கண்ட ஒலிபரப்புச்சேவை ஆகிய இரண்டையும், தனியார் மயப்படுத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அறிவித்துள்ளதாவும், இந்த தொடர்பு சாதனங்களைத் தனியார் மயப்படுத்துவது தொடர்பாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே ஒரு குழுவினை அமைக்க, ஜனாதிபதியால். ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதெனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தனியார் மயப்படுத்தலைச் செய்வதன்மூலம், நல்லதொரு ஆட்சியை சுதந்திர ஊடகத்துறைமூலம் வழங்கலாமெனவும், அவ்வாறு செய்யாவிட்டால் இந்த ஊடகங்களை ஆளும் சபை ஒன்று நிர்வகிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்வாறான ஆளும்சபைக்குக் கீழே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனங்களும் அடங்கும்.

அத்துடன், தறபோது நடைமுறையிலுள்ள ஊடகத்துறை தொடர்பான முறைப்பாட்டுப்பிரிவில், இனிமேல் பத்திரிகையின் உண்மைத் தன்மை தொடர்பான தரத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டுமெனவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

## உடப்பு கிராமத்துக்கு பிரதமர் செல்வார்

(கொழும்பு)

புத்தளத்திலுள்ள உடப்புக் கிராமத்துக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சனிக்கிழமை விஜயம் செய்யவுள்ளார்.

இக்கிராமம் - முழுமையான ஒரு தமிழ்க் கிராமமாகும். இங்கு இலங்கையின் பிரதமர் ஒருவர் விஜயம் செய்வது இதுவே முதல் முறையாகும். (01)

# கிழக்கு மாகாண நிலைவரம் குறித்து மனித உரிமை ஆணைக்குழு மதிப்பீடு


(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணம் நிலைவரம் குறித்து நேரில் மதிப்பீடு செய்துகொள்வதற்காக, மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி ராதிகா குமாரசாமி தலைமையிலான ஐந்து உறுப்பினர்கள், மட்டக்களப்புக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தனர்.

இரண்டு நாள் விஜயமாக மட்டக்களப்புக்குச் சென்றுள்ள இந்தக குழுவில் - கலாநிதி தீபிகா உடகம, டொக்டர் எம்.ஏ.செய்நுதீன் ,திருமதி எஸ்.எஸ்.சேனநாயக்க மற்றும் சட்டபீட விரிவுரையாளர் செல்வக்குமரன் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவினர் வாழைச்சேனை மீராவோடையில் மீளக் குடியமர்ந்த மக்களின் நிலைவரம் மற்றும் மக்களுக்குத் தேவையான பொருட்கள் குறித்தும் ஆராய்ந்தனர். இந்தக் குழுவினர் விநாயகபுரத்திலுள்ள அகதிமுகாமுக்கு விஜயம்செய்து, அங்கு தங்கியுள்ள அகதிகளுடன் பேச்சுநடத்தினர்.





நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த மாவீரர் நாள் நிகழ்வில் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தப்படுவதை முதற்படத்திலும், தென்னாபிரிக்காவில் நடந்த மாவீரர் தின நிகழ்வில் - இடம்பெற்ற இசை நிகழ்ச்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மக்களின் ஆணையைப் பெறுவதற்கு ஐ.தே.முன்னணியினர் பிரசாரப்பணி!

(கொழும்பு)

மக்களால் வழங்கப்பட்டுள்ள சமாதான ஆணையை மீண்டும் வலியுறுத்தி, பாரிய வெற்றியைப் பெற்றுத் தேர்தலுக்குத் தயாராவதென ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் ஒன்று, அதன் தலைமை அலுவலகமான சிறிகோத்தாவில் இடம்பெற்றபோது, அங்கு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2001 ஆம் ஆண்டு ஐ. தே.மு. முன்வைத்த தேர்தல் விஞ்ஞா பனத்துக்கு மதிப்பளித்த மக்கள், சமாதானம் ஒன்று உருவாக வேண்டு மென்பதை வலியுறுத்தி, அதனை அரசாங்கமாக மாற்றினர்.

ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்டு விளங்கும் ஜனாதிபதி, சகல சமாதான முயற்சிகளையும் குழப்பி வருகிறார். இதனால், மக்களின் வலுவான ஆணையைப் பெறுவதற்கு மீண்டும் ஓர் தேர்தலை சந்திக்க தயாராகி வருவதாகவும், இதற்காக நாடு முழுவதும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதன்படி, ஐக்கிய தேசியக்கட்சி ஒவ்வொரு வார இறுதியிலும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு பிரதேசத்துக்கும் செல்லவுள்ளதாக மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (01)

# இலங்கையில் அபிவிருத்தியை விட நோய்களின் தாக்கமே அதிகரிப்பு!

## மேலதிக அரச அதிபர் கவலை

இன்றைய சூழ்நிலையில், நாட்டில் அபிவிருத்தியைவிட, தொற்று நோய்களின் தாக்கமே அதிகரித்துள்ளது. இந்தநிலை மாறவேண்டுமாயின், உடனடியாகச் சமுதாய விழிப்புணர்ச்சி திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என - மேலதிக அரச அதிபர் பத்தினி யம்மா தெரிவித்தார்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால், யுனிசெப் அனுசரணையுடன் - வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட உலக எயிட்ஸ்தின நிகழ்வில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் - நாட்டில் அபிவிருத்தியை விட, நோய்களால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலைமாற வேண்டும். நோய்கள் சம்பந்தமான கல்வியறிவு, மக்களிடம் போதியளவில் இல்லை. நுளம்பின் மூலம் எயிட்ஸ் தொற்று ஏற்படும் என நம்பும் சமுதாயம் இன்றும் எம் மத்தியில் உள்ளதை அறிய முடிகின்றது. தவறான துர்நடத்தைகளால்தான், எயிட்ஸ் தொற்று ஏற்படுமெனக் கூறமுடியாது. சிங்கள இன வைத்தியர் ஒருவர், இரத்த மாற்றின் மூலம் எயிட்ஸ் தொற்றுக்கு அண்மையில் ஆளாகியுள்ளார்.

எனவே, இந்த விழிப்புணர்வு நிகழ்வுகளை முன்னெடுக்கும் நிறுவனங்கள் பாராட்டப்படவேண்டியவை.

வெளிநாட்டுக்குச் செல்வதாயின், நாம் விசாவினைப் பெறச்செல்லும் போது, முதலில் நோய்களின் தாக்கங்களுக்கு உட்படாதவர் என்பதை உறுதிசெய்ய, வைத்திய பரிசோதனை செய்து, அதற்கான சான்றிதழையும் இணைக்கவேண்டும். எதிர்காலத்தில் திருமணங்களுக்கு முன்பு ஆண், பெண் இருபாலரிடமும் மருத்துவ அறிக்கை கோர வேண்டிய நிலை ஏற்படலாம் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஓவிய, வினா விடைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன, அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (111)





நெடுந்தீவில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வின்போது, மாவீரர்களது பெற்றோர் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு அழைத்து வரப்படுவதையும், மாவீரரின் திருவுருவப்படத்திற்கு தந்தையொருவர் மலர் மாலை அணிவதையும் படங்களில் காணலாம்.

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக பத்தாவது ஆண்டையொட்டி போட்டிகள்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு நிறுவனத்தின் - 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, கிராமியக்கலைகள், இசைநாடகங்கள், நாட்டுக் கூத்துக்கள் ஆகிய போட்டிகள் அடுத்த மாதம் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பல இளம் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளதுடன், நாட்டுக்கூத்துக்கு 10, இசைநாடகத்தில் 17, சிந்துநடைக்கூத்து 17, கிராமியக் கலைகளுக்கு 76 ஆக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு தை மாத இறுதிப்பகுதியில், பரிசளிப்பு விழா நடைபெறுவதுடன், போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்ற கலைகள் ஆற்றுகை செய்யப்படவுள்ளது. 50 கிராமியக் கலைகளை உள்ளடக்கியதாக, மாபெரும் ஊர்வலம் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழக செயலாளர் செல்லையா மெற்றாஸ்மயில் தெரிவித்தார். (91)

## சின்னஞ்சிறு செய்திகள்

### திரைப்பட அறிமுக விழா

யாழ்.மாவட்டத் திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனம், தயாரித்து வழங்கும் - 'யாருக்கு யார் காவல்?' எனும் விவரணத் திரைப்பட அறிமுகவிழா - நாளை மறுதினம் பி.ப. 3 மணிக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### பளை பகுதிக்கு பதிவாளர் நியமிக்கப்படவில்லை

(பளை)

பளைப் பகுதி மக்கள் - பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் இன்மையால், மிகவும் சிரமத்தினை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இயக்கச்சிப் பிரதேச பதிவாளரே இந்தப் பகுதிக்கும் பதிவுக் கடமை புரிவது குறிப்பிடத்தக்கது. (115)

### பொதுக்கூட்டம்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளத்தின் - வருடாந்த பொதுக் கூட்டம், சித்தங்கேணியில் அமைந்துள்ள சம்மேளன காரியாலயத்தில், தலைவர் எஸ்.இராசலிங்கம் தலைமையில் - எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில், நெறியாளர் குழு உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறவிருப்பதுடன், புதிய தீர்மானங்கள் முன்வைப்பட்டு, ஆண்டறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர். (91)

### இலவச சித்திரப்பயிற்சி

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சித்திர ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்குடன், ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் - ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனம் - தரம் 7 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு ஒரு மாதகால இலவச சித்திரப் பயிற்சியை - எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. பயிலவிரும்பும் மாணவர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பனை தென்னை வள சங்கத்தால்

# பதினொரு முன்பள்ளிகளுக்கு இலவச சீருடைத்துணி வழங்கல்

(நவக்கிரி)

அச்சுவேலி - பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால், நடாத்தப்படும் பதினொரு முன்பள்ளிகளைச் சேர்ந்த, சுமார் 350 சிறுவர்களுக்கு - இலவசமாக சீருடைத் துணி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில், சீருடைக்கான துணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும், சீருடைத்துணி வழங்கும் நிகழ்வு - எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (128)

# திருமறைக் கலாமன்ற 38 ஆவது ஆண்டு நிறைவுவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றத்தின் - 38 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று காலை 7 மணிக்கு விசேட வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதனை முன்னிட்டு, ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிறப்பு நிகழ்வுகளான நடனம், நாடகம், ஒயிலாட்டம் என்பனவும் மேடையேற்றப்படவுள்ளன.

அத்துடன், திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட தென்மோடி நாட்டுக்கூத்தும், போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

திருமறைக்கலாமன்ற இயக்குநர் - அருட்தந்தை கலாநிதி மரியசேவியர் அடிகளாரின் பிறந்த தினத்தையே திருமறைக்கலாமன்ற தினமாகக் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

# பளைப் பகுதியில் உள்ள பாடசாலைகள் அடிப்படை வசதிகளற்று இயங்குகிறன

பளைப் பகுதி பாடசாலைகள்- அடிப்படைவசதியில் மிகவும் பின் தங்கியுள்ளமை, கவலை அளிக்கின்றது என்று, கிளிநொச்சி பிரதேச புனர்வாழ்வு திட்ட ஆலோசகர் ச.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

பளை பிரதேச - இயக்கச்சி, கோயில்வயல், சோரன்பற்று பாடசாலை மாணவர்களுக்கு, பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே, முன்னாள் கல்விப் பணிப்பாளரும், தற்போதைய கிளிநொச்சி புனர்வாழ்வு திட்ட ஆலோசகருமான ச.தணிகாசலம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இப்பகுதி பாடசாலைகளுக்கு அவசர தேவைகள் நிறைய உண்டு என்பதைக் கண்கூடாகக்காணும் போது, மிகவும் வேதனையாக உள்ளது. வடக்கு - கிழக்கில் எத்தனையோ அரசசார்பற்ற நிறுவனங்கள் உண்டு. ஆனால், அவை பொருத்தமானவர்களுக்கு உதவுவதாகக் காணப்படவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும்.

மிகவிரைவில் சோரன்பற்று கணேசாவித்தியாலயம் உட்பட, பளைப் பகுதி மாணவர்களுக்கு - கிளிநொச்சி அரச அதிபர் மூலம் பல உதவிகள் பெற்றுக்கொடுக்க ஆவண செய்வேன் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு - தலா ஐந்து அப்பியாசக் கொப்பிகள், கணிதஉபகரணப் பெட்டி முதலியன வழங்கப்பட்டன. (115)

### புனரமைப்பு

அல்லிப்பளை சி.சீ.த.க பாடசாலையை இயங்கவைப்பதற்கு - கிளிநொச்சி அரச அதிபர் 80 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் ஆண்டில் இந்தப் பாடசாலையை இயங்கவைக்க, புதிய மண்டபம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இந்தப் பாடசாலைக்கு புதிய அதிபர் ஒருவரும் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (115)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ம.மரியறெஜினா
முகவரி : 262/6 துண்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------
முகவரி :---------------
பிறந்த ஆண்டு:---------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------
பெற்றோர் ஒப்பம்

66. புல் என்பதன் பன்மைச்சொல்.
1. புற்கள் 2. புள்கள் 3. புல்கள் 4. புட்கள்

67. அழுத பிள்ளை.................. பொருத்தமான முடிக்கும் பகுதி எது ?
1. நஞ்சு குடிக்கும் 2. பால் குடிக்கும்
3. நீர் குடிக்கும் 4. குளிர்பானம் குடிக்கும்.

68. உலகில் அதிக மக்கள்கொண்ட நாடு
1. சீனா 2. அவுஸ்திரேலியா
3. இந்தியா 4. இலங்கை

* "முதன் முதலாக பாடசாலைக்கு சென்ற போது..." என்னும் தலைப்பில் ஏழு வாக்கியங்களை 69 முதல் 75 வரை விடை எழுதுக. ( ஒவ்வொரு வசனமும் நான்கு சொற்களுக்கு குறையாது, பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைதல் வேண்டும்).


**த.அம்பிகைபாலன்**
**(ஆசிரிய ஆலோசகர்)**

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
## க.பொ.த சாதாரண தரம் 2003

01. இயற்கையின் சூழலில் - உயிருள்ள பொருட்களும், உயிரற்ற பொருட்களும் உள்ளன. உயிருள்ள பொருட்கள் அங்கிகளாக விளங்குகின்றன. இன்றைய காலகட்டத்தில், பயிர்களிலிருந்து அதிக பயனைப் பெறும் முகமாக வளமாக்கிகள், களைகொல்லிகள், பீடைகொல்லிகள் கூடுதலாகப் பயன்படுத்துவதால், இவை மனிதனின் உடலைச் சென்றடைவதாகவும், மனித உடலில் D.D.Tயின் செறிவு குறித்தவீதம் இருப்பதாகவும், இதனால் - பலவிதமான நோய்கள் பரவலாம் எனவும் கருதப்படுகிறது.


1. சூழற் தொகுதியின் இரு கூறுகளும் எவை?
2. சூழற் தொகுதியின் சமனிலையைப் பேணும் காரணிகள் எவை?
3. நைதரசன் சக்கரம் சூழற்தொகுதி சமநிலையில் வகிக்கும் பங்கு யாது?
4. தாவரங்களினால் நைதரசன் உறுஞ்சப்படும் 3 வடிவங்களைக் குறிப்பிடுக.
5. மனித உடலில் D.D.T யின் செறிவு எவ்வாறு பரவமுடியும் என விளக்குக?

02. மேற்படி உரு - தைனமோவின் ஒருவகையை விளக்குவது.





1. அதன் பகுதிகளைப் பெயரிடுக?
2. இது தைனமோவின் எந்த வகையைச் சார்ந்தது?
3. இது தொழிற்படும் நிலையை சுருக்கமாக விளக்குக?

4. இதன் தொழிற்பாட்டிற்குரிய மின்னியக்கவிசை நேரவரைபை வரைக?
5. மேற்படி தைனமோ சைக்கிள் தைனமோவிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறது.

03.



04. துணிக்கை ஒன்றின் இயக்கத்திற்கான வேக-நேர வரைபு தரப்பட்டுள்ளது.

1. துணிக்கை மாறாவேகத்தில் சென்ற நேரம் யாது?
2. வரைபு கீழ்நோக்கி சென்றமைக்கான காரணம் யாது?
3. துணிக்கை ஆர்முடுகலுடன் இயங்கிய நேரம் யாது? ஆர்முடுகலைக் காண்க?
4. துணிக்கை ஆர்முடுகலுடன் இயங்கிய நேரத்தில் துணிக்கையில் 10N விசை செயற்பட்டதாயின், இனி நேர இடையில் செய்யப்பட்ட வேலையைக் காண்க?
5. துணிக்கையுடன் திக்கொலிநாடா ஒன்று இணைக்கப்பட்டிருந்தால், முழு இயக்கத்தின்போதும் நாடாவில் பதிந்துள்ள குற்றுக்களைப் பருமட்டான படம் ஒன்றில் காட்டுக.

05.



1. மேலே தரப்பட்ட சுற்றின் மொத்தத் தடை யாது?
2. $A_1, A_2$ அம்பியர் மானிகள் காட்டும் வாசிப்புகள் யாது?
3. $V_1 V_2 V_3$ வோல்ற் மானிகள் காட்டும் வாசிப்பு யாது?
4. கடத்தியின் நீளம், குறுக்கு வெட்டுப்பரப்பு, கடத்தியின் தடைத்திறன் ஆகியவற்றுடன் தொடர்புபடும் சமன்பாட்டைத்தருக.
5. ஓமின் விதியைத் தருக.

06. 1. மனிதத் தோலின் கட்டமைப்பை வரைந்து பெயரிடுக?
2. தோலின் தொழில்களைத் தருக?
3. தோலில் காணப்படும் வாங்கிகள் எவை?
4. தோலில் காணப்படும் நெய்ச்சுரப்பியின் தொழில் யாது?
5. நாக்கினால் உணரப்படும் சுவைகளையும், நாக்கின் பகுதிகளையும் தருக?

**சி.பாலச்சந்திரன்,**
**ய/வட்டு.திருநாவுக்கரசு வித்தியாலயம்.**

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்



## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2003

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கவனத்திற்கு!

நீங்கள் முதலாவது பரீட்சைத்திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுகிறீர்கள். பரீட்சை இலகுவானது. பரீட்சையைக் கண்டு பதற்றம் அடைய வேண்டாம். முதல்நாள் இரவு நீண்டநேரம் விழித்து இருந்து படிக்க வேண்டாம். 9.00 மணிளவில் நித்திரைக்குச் சென்று, நன்றாக நித்திரை செய்யுங்கள். காலை 9 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.

உங்கள் அம்மா, அப்பா (பெற்றோரின்) ஆசீர்வாதத்தைப் பெற்ற பின், ஸ்நானம் செய்து உங்கள் சமயக்கோயிலுக்குச் சென்று, இறைவனை வழிபட்ட பின்னர், உங்கள் பாடசாலை ஆசிரியரின் ஆசீர்வாதத்தைப் பெற்றபின், காலையுணவை வழமைபோல அருந்திவிட்டு, பரீட்சை மண்டபத்துக்குச் செல்லுங்கள். ஏறத்தாழ 8.45 இற்கு போனால் போதுமானது.

உங்களுக்குப் பரீட்சை மேற்பார்வையாளரால் 9.00 மணிக்கு வினாத்தாள் I வழங்கப்படும். வினாத்தாள் ஒன்றைக் கவனமாக வாசியுங்கள். அதற்கான நேரம் 45 நிமிடம். அவ்வினாத்தாளைச் சரிவர வாசித்து, அறிவுத்தலின்படி விடை எழுதுங்கள். நேரம் முழுவதையும் வினாத்தாளுடன் செலவழியுங்கள். அழகான விளக்கமுடைய எழுத்தில் விடை எழுதுங்கள். அறிவுறுத்தலில் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் எழுதுக என இடப்பட்டிருந்தால் ✓, x என அடையாளம் இடாதீர்கள். சரியான விடை இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக எனின், ( 2 ) என எழுதுக. அதற்குப் பதிலாகச் சரியான விடையின் கீழ் கோடிடவேண்டாம். வினாத்தாள் I இல் அதிக படம் வரும். ஆனால், கவனமாக விளங்கி விடை எழுதுங்கள்.

வினாத்தாள் II இல் சமயம் தவிர்ந்த ஏனைய பாடவினாக்கள் வரும். கட்டுரை ஒன்று வரும். அது பற்றி ஆறு அல்லது ஏழு வசனங்கள் எழுதவேண்டிவரும். ஒன்றுக்கு இரண்டு புள்ளிவீதம் வழங்கப்படும். கணிதத்துக்கு இரண்டு புள்ளிவீதம் வழங்கப்படும். பொதுவான கேள்விகள் அமையும் வினாத்தாள் I உம், வினாத்தாள் II உம் சேர்த்துதான் வெட்டுப்புள்ளி, தோற்றியோரின் ஐந்து சதவீதத்துக்கு அமையும்.

நீங்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

**த.அம்பிகைபாகன்**
**(ஆசிரிய ஆலோசகர்)**

* இல.01 தொடக்கம் 03 வரையுள்ள வினாக்களில் காட்டப்பட்டுள்ள படங்களுக்கு மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01.


1. மாணவனும் ஆசிரியரும் விளையாடுகின்றனர்.
2. மாணவனுக்கு ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.
3. மாணவனை ஆசிரியர் தண்டிக்கின்றார்.

02.


1. தாத்தா பேரனை அடிக்கின்றார்.
2. தாத்தா பேரனை அன்புடன் தொடுகின்றார்.
3. தாத்தா பேரனை கண்டிக்கின்றார்.

03.


1. கடைக்காரன் எலியைப் பார்க்கின்றான்.
2. கடைக்காரன் எலியுடன் உறவாடுகின்றான்.
3. எலி துள்ளித்துள்ளி விளையாடுகின்றது.

* பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி இல.04 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

| பெயர் | பிறந்ததிகதி | ஆண்/பெண் | பொழுதுபோக்கு |
|---|---|---|---|
| மயூரன் | 1995 ஆனி 10 | ஆண் | தோட்டம் செய்தல் |
| குமுதா | 1993 தை 22 | பெண் | முத்திரை சேகரித்தல் |
| ஆனந்தன் | 1995 பங்குனி 15 | ஆண் | வானொலி கேட்டல் |
| கமலா | 1995 ஆனி 10 | பெண் | தொலைக்காட்சி பார்த்தல |
| குமரன் | 1995 ஆவணி 8 | ஆண் | முத்திரை சேகரித்தல் |


04. முத்தரை சேகரிப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டவர்களின் பெயர்களை எழுதுக.
............................................................
05. 1995 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் எத்தனை பேர்?
............................................................
06. யாருடைய பிறந்ததினம் தை 27 ஆம் திகதி வருகிறது?
............................................................
07. இந்த அட்டணையிலுள்ள ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?
............................................................
08. இந்த அட்டவணையில் கூறப்பட்டுள்ள பொழுது போக்குகளை எழுதுக.
............................................................
09. ஒரே பிறந்த தினத்தைக்கொண்ட இருவரும் யாவர்?
............................................................
10. 1995 ஆம் ஆண்டில் பிறக்காத மாணவன் யார்?
............................................................

* அருகிலுள்ள படத்தைக் கவனமாக உற்றுநோக்கிய பின், அதனைப் பற்றி நான்கு சொற்களுக்குக் குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக.




11. ........................................
12. ........................................
13. ........................................

* பின்வரும் படங்களுள் பொருத்தமில்லாத (தொடர்பற்ற) படத்தை (இல. 14 முதல் 15 வரை) தெரிவுசெய்து, அதன் கீழ் கோடிடுக.

14.
15.


* நிறை குறிக்கப்பட்டுள்ள வெற்றுப் பைக்கற்றுக்கள், பெட்டிகள், மேலுறைகள் என்பன கீழே தரப்பட்டுள்ளன. இலக்கம் 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.



16. இவற்றுள் கூடிய நிறையுள்ள பொருள் எது?
..........


17. இவற்றுள் குறைந்த நிறையுள்ள பொருள் எது?
..........

18. பொருட்களின் நிறைக்கேற்ப, பொருட்களின் பெயர்களை இறங்கு வரிசையில் எழுதுக.
..........

19. பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது, பாவிக்கும் மிக உகந்த பொருள் இவற்றுள் எது?
..........

20. உடுப்புக்களை கழுவுவதற்கு பயன்படும் பொருள் ஒன்று உள்ளது? அது எது?
.......... அதன் நிறை யாது? ..........

❋ இல 21 முதல் 25 வரையுள்ள வினாக்களில் உள்ள எண் கோலங்களை கவனமாக உற்று நோக்கி, அடுத்து வரும் எண்ணை பென்சிலால் வரைந்து காட்டுக.



21. (i) (ii) (iii) (iv) (v) ..........
22. (i) (ii) (iii) (iv) (v) ..........
23. (i) (ii) (iii) (iv) (v) ..........
24. (i) (ii) (iii) (iv) (v) ..........
25. (i) (ii) (iii) (iv) (v) ..........

26. ஓரிடத்தில் EXIT எனும் சைகைப் பலகை உள்ளது. இந்தப் பலகைத் துண்டை கண்ணாடி முன்னால் பிடிக்கும் போது தெரியும் விதத்தில் கீழ் கோடு இடுக.
1. TIXE 2. EXIT 3. TIXE

❋ மாலைக்காட்சி ஒன்றிலே நீங்கள் காணக்கூடியவற்றைத் தெரிவு செய்து, இல 26 முதல் 29 வரையானவற்றைத்தரப்பட்டிருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- சனக்கூட்டம் நிறைந்து காணப்படுகிறது.
- சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றான்.
- கடல் அமைதியாக காட்சியளிக்கிறது.
- பல்வேறு விதமான பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
- சிறுவர்கள் தம்மை மறந்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.
- பறவைகள் கூட்டங்கூட்டமாக தமது இருப்பிடத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கின்றன.

27. ..........
28. ..........
29. ..........

❋ இல. 30 முதல் 32 வரையிலான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

30. ஆற்றில் எப்போதும் இருப்பது.
1. கரை 2. மீன் 3. நீர் 4. படகு

31. புத்தகமொன்றில் எப்போதும் இருப்பவை.
1. படங்கள் 2. கதைகள் 3. பக்கங்கள் 4. கவிதைகள்

32. வகுப்பறையொன்றில் எப்போதும் இருப்பது.
1. பிள்ளைகள் 2. ஆசிரியர்கள் 3. புத்தகங்கள் 4. மேசைகள்

33. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள செங்கற்குவியலில் எத்தனை செங்கற்கள் உள்ளன எனப் புள்ளிக்கோட்டில் எழுதுக.




❋ இல. 34 முதல் 35 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றும் உணர்த்துகின்ற கருத்தைத் தரும் தனிச்சொல்லை தரப்பட்டுள்ள மூன்று சொற்களிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ் கோடிடுக.

34. கப்பல்கள் நங்கூரம் இடப்பட்டிருக்கும் இடம்.
1. கடற்கரை 2. ஏரி 3. துறைமுகம்

35. வாசிப்பதற்கெனப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடம்.
1. கடை 2. நூலகம் 3. களஞ்சியசாலை

❋ இல 36 முதல் 40 வரையுள்ள வினாக்களில், படம் I இற்கு பொருத்தமில்லாததை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.



36. 01 02 03 04 05
37. 01 02 03 04 05
38. 01 02 03 04 05
39. 01 02 03 04 05
40. 01 02 03 04 05

❋ பின்வரும் துண்டுப்பிரசுரத்தை கவனமாக வாசித்து, அதன் கீழுள்ள இல 1 - 15 வரையான வினாக்களுக்கு முழுமையான விடைகளை எழுதுக.

> அன்பார்ந்த பிள்ளைகளே !
>
> நகம்கடிப்பது தவறான பழக்கமாகும். நகங்கள் எளிதாக அசுத்தமடையக்கூடியவை. அந்த அசுத்தங்கள்மூலம் நோய்க்கிருமிகள் உடலுக்குள்பரவும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. எனவே - நகங்களை வெட்டிச்சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். உணவை உண்ணும் முன்னர் - சவர்க்காரத்தைப் பூசி, கைகளைக் கழுவிச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும். தினமும் பாடசாலை விட்டு வீடு சென்றதும் கை, கால் முகம் கழுவ மறவாதீர்கள்.
>
> **இனிமேல் நகம் கடிக்கமாட்டோம். என்று உறுதி எடுத்துக்கொள்ளுங்கள்.**
>
> சுகாதாரப்பகுதி

01. தவறான பழக்கம் எது?
..........

02. தவறான பழக்கம்மூலம் ஏற்படும் தீயவிளைவு எது?
..........

03. உணவு உண்ணும் முன்னர் யாது செய்யவேண்டும்?
..........

04. நாம் எவ்வாறான உறுதியை எடுத்துக்கொள்ளவேண்டும்.
..........

❋ ஒத்தசொல் தருக.

05. உடல் .......... 06. வீடு ..........

இங்கே மடிக்கவும்



❋ எதிர்ச்சொல் தருக.

07. அசுத்தம் .......... 08. தவறு ..........

❋ ஒருமைச் சொற்களை எழுதுக.

09. நகங்கள் .......... 10. கைகளை ..........

11. "எடுத்துக் கொள்ளுங்கள" என்பது உணர்த்தும் காலம் எது?
..........

12. நாம் எவ்வாறு உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்?
..........

13. நகம் கடிப்பது தவ்றான பழக்கமாகும். இவ்வாக்கியத்தில் வரும் எழுவாய்ச் சொல் எது?
..........

14. "கடிக்க மாட்டோம்" என்பதன் தன்வினை வடிவம் யாது?
..........

15. இத்துண்டுப்பிரசுரத்தில் காணப்படும் சினைப்பெயர் ஒன்றினை எழுதுக.
..........

❋ இலக்கம் 16 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்குரிய, சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.


16. ஒரு பென்சிலின் விலை ரூபா 3.50, ஒரு பேனாவின் விலை ரூபா 15.50 இரண்டினதும் விலை யாது?
..........

17. 83 ஐ உரோமன் இலக்கத்தில் எழுதுக?
..........

18. ஒரு வாளியில் $8l$ $250ml$ பால் ஊற்றலாம். இப்போது அதில் $2l$ $900ml$ பால் உள்ளது. அதனை நிரப்புவதற்கு இன்னும் எவ்வளவு பால் ஊற்ற வேண்டும்?
..........

19. தலைமை ஆசிரியர் 612 வர்ணச் சுண்ணக்கட்டிகளை 6 வகுப்பிற்கு சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். ஒரு வகுப்பிற்குக் கிடைத்த வர்ணச் சுண்ணக்கட்டிகள் எத்தனை?
..........

20. சதுரமொன்றை வரைந்து, அதற்குரிய சமச்சீர் அச்சுகளை வரைந்து காட்டுக?

21.  நிழற்றப்படாத பகுதியின் பின்னம் யாது?
..........

22. 498 cm ஐ m, cm இல் தருக.
..........

23. இன்று திங்கட்கிழமையெனின், நாளை மறுதினம் என்ன கிழமை?
..........

24. ரூபாய் பத்தை மாற்றக் கூடிய 2 முறைகளை எழுதுக.
..........
..........

25. கமலா 1kg பருப்பு ரூபா 40 விலையுள்ளதில் 1/2 kg யும், $1l$ எண்ணெய் ரூபா 100.00 இல், $750ml$ ம் வாங்கிக்கொண்டு ரூபா 100.00 ஐக் கொடுத்தாள். கமலாவிற்கு கடைக்காரன் கொடுத்த மீதிப்பணம் எவ்வளவு?
ரூபா.......... சதம்..........

❋ இல. 26 முதல் 30 வரையுள்ள தமிழ்ச்சொற்களை ( ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி ) ஆங்கில மொழியில் எழுதுக.

26. வைத்தியசாலை ..........
27. அலுவலகம் ..........
28. கரும்பலகை ..........
29. அடிமட்டம் ..........
30. நண்பன் ..........


❋ இலக்கம் 31 முதல் 35 வரையுள்ள தமிழ்ச்சொற்களை (சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி ) சிங்கள மொழியில் எழுதுக.

31. ஏழு ..........
32. பூ ..........
33. தம்பி ..........
34. அலுமாரி ..........
35. புத்தகம் ..........

❋ இலக்கம் 36 முதல் 45 வரையுள்ள வினாக்கள் மிகவும் பொருத்தமானதாயின் சரி எனவும், பொருத்தமற்றதாயின் பிழை எனவும் எழுதுக.

36. மரஞ்செடி கொடிகளின் பிரதான பகுதி பூவாகும். ( )
37. வல்லாரை கீரைவகைகளின் ஒன்று அல்ல. ( )
38. வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளில் நரியும் ஒன்றாகும். ( )
39. சட்டி, பானை செய்வதற்கு களிமண்ணைப் பயன்படுத்துவர். ( )
40. சமைத்த உணவை மூடிவைக்கக்கூடாது. ( )
41. அரச இலச்சினையில் தர்மச்சக்கரம் காணப்படும். ( )
42. இலங்கையின் தேசியப்பூ நீலோற்பலம். ( )
43. விளையாட்டு மைதானத்தில் விபத்து ஏற்படுவதில்லை. ( )
44. சுத்தமான நீர் நிறமற்றது. ( )
45. பயிர்ச்செய்கைக்கு ஏற்றது இருவாட்டிமண். ( )

❋ இல. 46 முதல் 50 வரையுள்ள வினாக்களில் - படத்திற்குரிய பெயர்களை பெயரிடுக




50. இவ்வுபகரணத்தின் பெயரென்ன?
..........

❋ பின்வரும் பாடலைப்படித்து, இல. 51 முதல் 60 வரையுள்ள வினாக்களுக்கு விடைதருக.

ஏர் பிடித்து வயல் உழுதோம்
அந்தக் காலம்
எந்திரத்தால் வயல் உழுவோம்
இந்தக் காலம்
வண்டி கட்டிச் சென்று வந்தோம்
அந்தக் காலம்
அண்டவெளி சென்று வந்தோம்
இந்தக் காலம்

51. அந்தக் காலத்தில் எதனைப் பிடித்து வயலை உழுதனர்?
..........

52. இக்காலம் வயலை எதனால் உழுவோம்?
..........

53. வந்தோம் என்பதன் நிகழ்கால வடிவம் யாது?
..........

54. இந்தக்காலம் என்பதனைப் பிரித்தெழுதுக?
..........

❋ ஒத்தசொல் தருக

55. ஏர் .......... 56. வயல் ..........

57. "வண்டி கட்டிச் சென்று வந்தோம்" இவ்வாக்கியத்தின் எழுவாய் எது?
..........

❋ எதிர்கருத்துள்ள சொல் தருக

58. அந்த .......... 59. வந்தோம் ..........

60. 'ஏர்பிடித்து வயல் உழுதோம்' இவ்வாக்கியத்தில் உள்ள வினை முற்று எது?
..........

❋ இல. 61 முதல் 68 வரையுள்ள வினாக்களில், மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

61. தமிழ் மொழியில் உள்ள மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை.
1. 12 2. 18 3. 30 4. 247

62. இலங்கையில் வானொலிச் சேவையை ஏற்படுத்தும் நிறுவனம்.
1. கடதாசிக் கூட்டுத்தாபனம் 2. ரூபவாஹினிக்கூட்டுத்தாபனம்
3. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 4. போக்குவரத்துச் சபை

63. வினாவாக்கியத்தில் இறுதியில் இடப்படும் குறியீடு.
1. . 2. ! 3. ? 4. ,

64. இலங்கையில் இன்று பதிவுத் தபால்கட்டணம் எவ்வளவு?
1. ரூபா 14.50 2. ரூபா 13.50 3. ரூபா 16.00 4. ரூபா 15.00

65. உள்ளூர் காசுக்கட்டளையை மாற்றும் இடம்.
1. தபாற்கந்தோர் 2. வங்கி
3. புகையிரத நிலையம் 4. ஆலயம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரில் வன்கணார் இல்.

- திருக்குறள்.

## நமது நோக்கு

# தலைமைப்பண்பு இதுவல்ல!

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவரான ஆனந்தசங்கரி தொடர்பான சர்ச்சைகள் கடந்த சில மாதங்களாக அதிகரித்துவந்துள்ளமை தெரிந்தவிடயமே

கூட்டணித் தலைமைத்துவத்திற்குள் நெருக்கடி ஏற்பட்டதுமுதல், அதன் உயர்மட்டத் தலைவர்களுள் சமகால அரசியல் பிரச்சினைகள், சமாதான முன்னெடுப்புகளில் கூட்டணியின் நிலைப்பாடு, கூட்டணியின் அடிப்படைக் கொள்கைக்கு முரணாக தலைமைத்துவம் நடந்துகொள்ளும் விதம், அதிகாரப்போட்டி ஆகியவை முரண்பாடுகள் மற்றும் கருத்தியல் மோதல்கள் ஆகியவற்றை ஏற்படுத்திவந்துள்ளமை தெரிந்ததே. சிலவேளைகளில் தெருச்சண்டை போலாகிவிட்ட கட்சித் தலைமைக்குள்ளான கருத்தியல் பூசல்கள் காரணமாக, கூட்டணியின் நிலைமையானது பலரதும் பரிகசிப்புக்குள்ளாகிவிட்டுள்ளமை கவலைக்குரியதே.

தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளை ஒன்றுபட்டு நின்று செயற்பட்டு வென்றெடுக்கவேண்டும் என்ற உறுதியான கொள்கை இலட்சியத்துடன், மக்களின்முன் தமது செயற்திட்டங்களை முன்வைத்து, தமிழீழ தனிநாட்டை உருவாக்குவதற்கான ஆணையை வேண்டி, மக்கள்முன் தமது இலட்சிய இலக்கினை பகிரங்கப்படுத்தி, தேர்தலில் போட்டியிட்ட கூட்டணிக்கு, மக்கள் முழுமையான ஆதரவை வழங்கியதன்மூலம், தனிநாட்டு இலட்சியத்தை வென்றெடுப்பதற்கான ஆணையை வழங்கினர் என்பது மறக்கக்கூடிய ஒன்றல்ல.

ஆனால், ஆணையை வழங்கிவிட்டு நம்பிக்கையுடன் ஒரு சுதந்திர வாழ்வுக்கான விடியலின் கனவுகளோடு கூட்டணியின் செயற்பாடுகளைப் பார்த்துக்கொண்டிருந்த தமிழ்மக்களை, கூட்டணியின் தலைவர்களின் மிதவாத சந்தர்ப்பவாத நடவடிக்கைகள் மிகமோசமாக ஏமாற்றியது. கூட்டணியின் இந்தக் கொள்கைப் பற்றின்மையும், பதவி ஆசையும் தமிழ்மக்கள் மீதான பேரினவாத சக்திகளின் ஒடுக்குமுறை செயற்பாடுகளுக்கு அனுசரணையாக அமைந்ததால், தமிழ்மக்கள் எதிர்கொள்ளநேர்ந்த அவலங்கள் சொல்லுந்தரமன்று.

இந்த அவலங்கள், அழிவுகள் அனைத்திற்கும் பொறுப்பேற்கவேண்டியவர்களான கூட்டணியினர், தொடர்ந்தும் தமது அரசியல் நலன்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளை அக்கறையுடன் மேற்கொள்ளமுயன்ற வேளையிலேயே தமிழ் மிதவாதத் தலைமைகள் மீதான நம்பிக்கையை, தமிழ் இளைஞர்கள் இழந்ததுடன், பேரினவாதத்தை எதிர்த்துப் போராட முனைந்தனர். அதுவே தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டமாக வளர்ச்சி கண்டபோது, அதற்கு முகங்கொடுத்து ஆதரவளிக்கும் திராணியற்ற கூட்டணித்தலைமை, பேரினவாதிகளுடனும், அந்நிய ஆக்கிரமிப்பு சக்திகளுடனும், அரசியல் மற்றும் உரிமை விட்டுக்கொடுப்புக்களுக்குத் தம்மை தயாராக்கி சமாதானத் தீர்வு முயற்சிகளை மேற்கொண்டு தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் நிறைந்த விடுதலைப்போராட்டத்தின் நியாயத்தன்மையை, துரோகத்தனமாக கொச்சைப்படுத்த முயன்ற நிகழ்வுகளும் நடந்தேறவே செய்தன.

இப்போது கூட்டணியை உருவாக்கியவர்களுள் தானுமொருவன் என அடிக்கடி உரிமைகோரும் ஆனந்தசங்கரியும் இந்த நடவடிக்கைகளின் பங்காளியாக ஏதோ ஒருவகையில் இருந்தவர்தான்.

அவர் ஒருபோதும் - ஒரேகொள்கை, ஒரேஇலட்சியம் என இயங்கிய ஒருவர் அல்ல. முதலில் லங்கா சமசமாஜக கட்சி, பிறகு தமிழ் காங்கிரஸ், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி என அவ்வப்போது அவரது அரசியல் தேவைக்கேற்ப தன்னை நிறம்மாற்றிக்கொண்ட ஒருவரேயாவார்.

அது அவரது இயல்பு... ஏன் அவரது சுதந்திரம் என்றுகூடக்கூறலாம். ஆனால், அவரது தனிமனித சுதந்திர செயற்பாடுகள், அவரது சொந்த இனத்தின் சுதந்திர வேட்கையை அவமதிப்பதாக இருக்கக்கூடாது என்பதே மிக முக்கியமான விடயமாகும்.

கூட்டணித் தலைமைப்பதவியில் ஆனந்தசங்கரியை ஏற்றிவிட்டவர்களே, இன்று அவர்மீது நம்பிக்கையில்லையென்று தூக்கி எறிய தீவிரம் காட்டியுள்ளார்கள் என்றால், அவரிடம் ஏதோ - எந்த வகையிலும் அங்கீகரிக்கமுடியாத தவறுகள் இருக்கின்றதென்றுதான் அர்த்தம்.

எந்தவொரு தலைவனும் தனது ஆட்களின் நம்பிக்கையை பகிரங்கமாகவே இழந்ததன் பின்னர் தான்தான் இன்னமும் தலைவன் என சட்டரீதியாகதர்க்கம் புரியத் துணிவதும், பதவியைவிட்டு இறங்கவேமாட்டேன் என வீம்பு கொள்வதும் விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்று கூறும் தன்மையின் அப்பாற்பட்டவையாகும்.


சரியான, நியாயமான, தன்மீதான குற்றச்சாட்டுக்கள் போலியானவை என நெஞ்சார உணர்ந்துள்ள ஒரு தலைவன் - தன்னை நிராகரிக்கமுனைவோர் தன்னை தூக்கயெறிய முன்னரே, கௌரவமாக தனது பதவியிலிருந்து விலகி, மக்கள்முன் வந்து தனக்கான மக்களின் ஆதரவுச் சக்தியை நிரூபித்துக்காட்டவேண்டும். ஆனந்தசங்கரியார் அதைச் செய்யத் தவறிவிட்டார்.

தூக்கியெறிந்த பின்னரும் வலுவற்ற காரணங்களைக் காட்டி பதவியில் ஒட்டியிருக்கப் பிடிவாதம் பிடிக்கும் ‘அசிங்கம்’ ஒரு தலைமைக்குரிய பண்பல்ல. இதை ஆனந்தசங்கரியார் உணரத்தவறிவிட்டார். அல்லது அவரை ஆட்டுவிக்கும் சக்திகள் அவர் அதை உணரவிடாது செய்து விட்டன.

இது தமிழ் மக்கள் அவரின் செயல்கள் குறித்து தற்போது கொண்டுள்ள கருத்தியல் நிலைப்பாடாகும்.

## நாடும் நடப்பும்

*செய்தி* : நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தோற்றுப் பதவியை இழந்தபின்னரும் தானே கூட்டணியின் தலைவர் என்கிறார் ஆனந்தசங்கரி




# நன்றி கூறும் மரபு தமிழர்களுக்குரியது எனவேதான் மாவீரர் தினம் வருகிறது!

## ஊர்திப்பகுதிப் பொறுப்பாளர் செல்வராசா

“நன்றி கூறும் மரபு தமிழர்களுக்குரியது. எனவேதான், மாவீரர்தினம் உருவாகியது. இன்றைக்குத் தலைவரின் பிறந்த தினத்தில், அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்கும், பிறவிடயங்களைப் பேசுவதற்கும், ஐரோப்பிய நாடாளுமன்ற வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்பற்றன் வருகை தந்துள்ளார் என்றால், அதற்குக் காரணம் - இந்த மாவீரர்களது அளப்பரிய தியாகந்தான்.

பளைப்பகுதியில் நடந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் ஊர்திப்பகுதிப் பொறுப்பாளர் செல்வராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பளைப்பகுதி மாவீரர்களினது பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, பளை மத்திய கல்லூரியிலும், பளை நகரப்பகுதியிலும் இடம்பெற்றன. கடந்த மாதம் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை இடம்பெற்றநிகழ்வில், மாவீரர்களது பெற்றோர்கள், தளபதிகள், பேராளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக விசேடமாக அமைக்கப்பட்ட பளைப்பகுதி மாவீரர்களது உருவப்படங்களைக் கொண்ட அலங்கார மண்டபத்தின் முன்பாக, மங்கள வாத்தியம் சகிதம் - மாவீரர்களது பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டனர். பின்னர் தமிழீழத் தேசியக்கொடியினை வடமுனைத் தளபதி அறிவு ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகைச் சுடரினை தமிழீழ ஊர்திப் பகுதிப் பொறுப்பாளரான செல்வராசா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொதுச் சுடரினைக் களமுனைத் தளபதி மகேசன்ணாவும், பெருந்தோட்டப் பகுதிப் பொறுப்பாளர் சொலமனும், பொதுப்பட மலர் மாலையை வீமனும், மாவீரர் தனத்தின் பெற்றோரும் அணிவித்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ ஊர்திப்பகுதிப் பொறுப்பாளர் செல்வராசா-

கன்னத்தில் பொட்டிட்டு, இரத்தத்தினைப் பாலாக்கி ஊட்டித் தாயானவள் பிள்ளையை வளர்க்கிறார். பிள்ளை தடக்குப்பட்டு விழுந்தால், தாய் கண்கலங்குகின்றதைக் காணமுடியும். அப்படிப்பட்ட தாய், தந்தையர் - தங்கள் பிள்ளைகளை இந்தத் தேசத்துக்குக் கொடுத்தார்கள் என்றால், அவர்கள் போற்றப்படவேண்டியவர்கள்.

ஒரு தடவை தலைவரிடம் “நீங்கள் மாவீரர்களது பெற்றோர்களைச் சந்திப்பீர்களா?” என்று கேட்டேன். அதற்கு அவர் - “மாவீரர்களது இலட்சியத்தை வெற்றிபெறச் செய்துவிட்டு, அவர்களது பெற்றோர்களைச் சந்திப்பேன்” என்று குறிப்பிட்டார். எமது இலட்சியம் நிறைவேறும் பொழுது, தலைவர் - உங்கள் அனைவரையும் சந்திப்பார்.

நாம் உங்களுக்கு நிறைய உதவிசெய்ய விரும்புகின்றோம். அதற்காகவே சிரான் அமைக்கப்பட்டது. ஆனால், அது செயலிழந்துவிட்டது. ஆனாலும், இனிவரும் காலங்களில் நிறைய உதவி செய்வோம்.

இன்று சந்திரிகா போரை முன்னெடுக்காமல், தயக்கம் காட்டிவருகிறார். இதற்குக் காரணம் இந்த மாவீரர்களது அளப்பெரிய தியாகமே, அத்தகைய வீரர்களைப் பெற்ற நீங்கள் என்றும் பெருமைப்படவேண்டியவர்கள் என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய மகளிர் அரசியல் துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி - இழப்புக்கும், தியாகத்துக்கும் இடையிலான உணர்வுகளின் மத்தியில் நாம் நிற்கின்றோம்.

உயர்ந்த கற்பனைகளால் வளர்க்கப்பட்ட உங்கள் பிள்ளைகள் - இன்று மாவீரர்களாகி விட்டபோது, யாரும் சந்தோசம் அடையமாட்டார்கள். ஆனால், உங்கள் பிள்ளைகளின் தியாகத்தால் எமது இலட்சியம் நிறைவேறியது.

பெற்றபோது, வளர்த்தபோது இல்லாத சந்தோசம் - இப்போது உங்கள் பிள்ளைகள் - உங்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள். இதனையிட்டு நீங்கள் பெருமை கொள்ள முடியும்.

ஒருவரது மரணம் மூன்று அல்லது நான்கு சந்ததிக்குத்தான் நிலைத்துநிற்கும். ஆனால், ஒரு போராளியின் மரணம் - பரம்பரை பரம்பரையாக நிலைத்துநிற்கும் என்பது மிகவும் உண்மையானது. எமது வருங்கால சந்ததி இந்த மாவீரர்களை எப்போதும் மறக்கமாட்டார்கள். நீண்ட காலத்துக்கு இந்த மாவீரர்களது புகழ், வீரம், அர்ப்பணிப்பு பேசப்படும். அத்தகைய மாவீர்களைப் பெற்றவர்கள் நீங்கள்- மிகவும் போற்றப்படவேண்டியவர்கள்.

பெற்றோர்களால் வளர்க்கப்பட்ட போராட்டம் இது. அதிலும் மாவீரர்களது பெற்றோர்கள் மிகவும் முக்கியமானவர்கள். உங்கள் பிள்ளைகள் சான்றோர்களாக உயர்ந்து நிற்கின்றனர். தமிழன் எந்தமூலையில் வாழ்ந்தாலும், இந்த மாவீரர்களது வீரம், அர்ப்பணிப்பு மறக்கப்படமாட்டாது என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பளை பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணியும் உரையாற்றினார்.

# இறந்தவர்களையும், இழந்தவற்றையும் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது!

## கனடா மாவீரர்தின நிகழ்வில் பேராசிரியர் சந்திரகாந்தன்

தமிழர்களாகிய நாம் இன்று உயிருடன் வாழ்ந்து, இறந்தவர்களின் நினைவை மீட்டுப்பார்க்கிறோம் என்றால், அது எமது அதிர்ஷ்டத்தினாலேயே ஆகும். இதனை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

இவ்வாறு கனடாவின் தலைநகர் ஒன்றாறியோவில் நடந்த மாவீரர்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது பேராசிரியர் சந்திரகாந்தன் தெரிவித்தார்.

றொறன்றோ தமிழ்மாணவர் அமைப்பினரால் கடந்த வியாழன் இரவு ஒழுங்கு செய்யப்பட்ட மாவீரர்தின நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - நாம் நினைவு என்பதை இருவகைப்படுத்தலாம். அதில் ஒன்று கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவது. மற்றையது கொல்பவர்களை நினைவுகூருவது. இலங்கை அரசினது மனிதப்படுகொலைகள் பல சம்பவங்களாகவுள்ளன. சிங்களப்படைச் சிப்பாய்களாலும், அதிகாரிகளாலும் நிகழ்த்தப்பட்ட துயரமிக்க இந்தச் சம்பவங்களை நான் நினைத்துப்பார்க்கிறேன். இவர்கள் இராணுவக் கல்லூரிகளிலேயே தமது கல்வியைக் கற்றவர்கள். இந்தக் கலாசாரப் பின்னணியைக் கொண்டவர்கள் - மற்ற மனிதர்களைப்போல் உணவு உண்டு, ஆடை உடுத்தி வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆனால் குண்டு வீசி, குழந்தைகளைக் கொன்றுள்ளார்கள்.

கொல்லப்பட்டவர்களை ஞாபகப்படுத்தும்போது குறிப்பாக உயிரிழந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகளை எண்ணும்போது, அவர்களின் வாழ்வில் நம்பிக்கைக்கான காரணங்களைத் தேடுகிறேன்.

மேலும், தமது உயிரை யாருக்காகத் தியாகம் செய்தார்கள் என்பதையும் ஞாபகப்படுத்துகின்றேன். மரணமடைந்த ஒருவருக்காகப் பேசும் சக்தி எனக்கில்லை. அவர்களின் மரணம், அதை அவர்கள் ஏற்றுக்கொண்டமுறையும் சொற்களால் வர்ணிக்கமுடியாது.

நவாலியில் இலங்கைப்படை 120 அப்பாவிகளைக் குண்டு வீசிக்கொன்றபோது, நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன். நாகர்கோவில் பகுதிகளில் 38 குழந்தைகள் கொல்லப்பட்டபோது அங்கிருந்தேன். பிந்துனுவெவவில் கொல்லப்பட்டவர்கள் நமது ஞாபகத்தில் இருந்து அழிக்கமுடியாதநிலையில் உள்ளார்கள்.

கடந்த காலத்திலிருந்த எமது நம்பிக்கைகளை நீக்கிவிடமுடியாது. கடந்த காலத்தை மறந்துவிடுவது ஒரு சமூக பாவமாக கருதவேண்டும். இரத்தக்கறை படிந்த கடந்த காலத்தை மறந்துவிடக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# இடைக்கால நிர்வாகத்திற்கான பிரேரணைகள்

# வடக்கு - கிழக்கிற்கு மாத்திரமே!



**மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் - சமீபத்தில் கிளிநொச்சிக்கு வந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களோடு கலந்துரையாடல் நடத்தினார். அது பற்றி 'லங்காதீப' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகிறது.**

**கேள்வி:** நீங்கள் கடந்த மாதம் கிளிநொச்சிக்குச் சென்று, எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளீர்கள். எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு தொடர்பாக தெற்கில் பலவிதமான குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ளநிலையில், உங்களது இந்தச் சந்திப்பின் நோக்கம் என்ன?

**பதில்:** எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு வன்னிக்கு வரும்படி எங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது. அந்த அழைப்பை ஏற்றுத்தான் நாங்கள் வன்னிக்குச்சென்று, தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரோடு கலந்துரையாடினோம். நானும், எங்கள் கட்சியின் செயலாளர் சட்டத்தரணி ஜெயரட்ணராஜா, பிரகாஸ்கணேசன் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினர் அதில் பங்குபற்றினோம்.

அங்கு நாங்கள் பலவிதமான விடயங்களைக் கவனத்தில் எடுத்தோம். இதிலுள்ள விசேடமான தன்மைதான் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு வரலாற்றில் முதல் தடவையாக உத்தியோகபூர்வமாக ஆலோசனை வரைபு ஒன்றினை அரசிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள ஒன்றாகும். ஆரம்பத்தில் வேறு தனி அரசுக்கான எண்ணக்கருவோடு இருந்து, இப்பொழுது அதற்கான மாற்றுயோசனை பற்றி ஆலோசிக்கமுடியும் என்றநிலைக்கு அவர்கள் வந்துள்ளார்கள். ஆனால், இதுபோன்ற ஆலோசனை எதனையும் எல்.ரீ.ரீ.ஈ. இதுவரை எழுத்து வடிவில் வழங்கியிருக்கவில்லை. முதல் தடவையாகத்தான் இதனைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

ஆனபடியால், இந்தச் சந்தர்ப்பத்தினை ஒரு வரலாற்று நிகழ்வாக அவர்கள் காண்கிறார்கள். தெற்கின் சிங்கள மக்களுக்கு விடுக்கின்ற தோழமையுணர்வாகத்தான் இதனைக் காண்கிறார்கள். அவர்களது நட்பை ஏற்றுக்கொண்டு, தமிழ்மக்களுக்கு இதுவரை அவர்கள் அனுபவிக்க நேர்ந்த பாரபட்சங்களை நீக்குகின்ற தீர்வினை நோக்கிச் செல்லும் சந்தர்ப்பம் தோன்றும் என்றுதான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதன்பொருட்டு அரசாங்கம் ஆயத்தமாகவேண்டும். அது போன்ற தயார்நிலைக்கு அரசினைத் தூண்டிக்கொள்வதற்கு, தெற்கின் சிங்கள மக்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிடின், இந்த நாடு இரண்டாகப் பிளவுபடுவதை யாராலும் தடுக்க முடியாது. அப்படி இரண்டாகப் பிரியுமானால், அந்தப் பொறுப்பினை தெற்கிலுள்ள சிங்கள வகுப்புவாதிகள் ஏற்றுக்கொள்ளவேண்டிவரும்.

**கேள்வி:** ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற விதத்திலா, அப்படி இல்லையென்றால் மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் என்றரீதியிலா இந்தச் சந்திப்பிற்கு உங்களுக்கு அழைப்புக் கிடைத்தது?

**பதில் :** நான் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அல்ல என்பதை முதலிலேயே சொல்லவேண்டும். ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக்கட்சி ஒன்றின் தலைவன் நான். அதேபோன்று, மேல் மாகாண மக்கள் முன்னணி - மலைநாட்டின் ஒரு கட்சியும் அல்ல. மேல்மாகாண மக்கள் முன்னணி என்பது கொழும்பிலிருந்து களுத்துறைவரை வாழ்கின்ற தமிழ் மக்களை ஒன்றுபடுத்தும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட ஒரு கட்சி. அந்த அடிப்படையில்தான் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு எங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது. நான் அந்தக் கட்சியின் தலைவன் என்ற வகையில் சென்றேனேதவிர, அரசின் பிரதிநிதியாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலோ செல்லவில்லை. அதே போன்று, மலைநாட்டின் ஏனைய கட்சிகளுக்கும் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்கள்.

**கேள்வி:** இந்தச் சந்திப்பின்போது, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் இடைக்கால நிர்வாக அமைப்பு பற்றிய பிரேரணையின் உள்ளடங்கல்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதா?

**பதில் :** அதுபற்றி மேலோட்டமாகக் கலந்துரையாடப்பட்டதேதவிர, பரந்த உரையாடல் செய்யவில்லை. நோர்வே அரசினூடாக இந்த ஆலோசனை வரைவினை அரசுக்கு வழங்குவதுதான் உத்தியோகபூர்வமாக நிகழ்வது. அதற்கு முன்பு பகிரங்கப்படுத்தவேண்டாம் என்று நோர்வே அரசின் வேண்டுகோளும் இருந்தது.

**கேள்வி:** உத்தேசிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அமைப்பில், மலைநாட்டு மக்களின் வேண்டுகோளும் உட்படுத்தப்படவேண்டும் எனத் தங்கள் குழுவினால் கேட்கப்பட்டதாக அறிக்கைகள் வந்தன. அதைப்பற்றி ஏதாவது சொல்ல இருக்கின்றதா?

**பதில்:** அந்தவிதமான எந்த வேண்டுகோளையும் நாங்கள் விடுக்கவில்லை. இது வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கான இடைக்கால நிர்வாகம். அந்த நிர்வாகசபைக்கு, வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே உள்ள மக்களது பிரச்சினைகளை உட்புகுத்த முடியாது. அப்படிக் கேட்கப்படுமானால், அது அறிவற்ற செயற்பாடாகும். அரசியல் இலாபங்களுக்காகப் பேசுகின்ற சிலர் அப்படிச் சொல்லலாம். ஆனால், அது பிழையானது. அந்த ஆலோசனை வடக்கு- கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளுக்கு வழங்கவேண்டிய தீர்வின் முன்மாதிரியாக இருக்கலாமேதவிர, அதில் - எங்களது பிரச்சினைகளை உட்புகுத்த முடியாது. அது நடைமுறைச் செயற்பாடும் அல்ல. அதனூடாக அநாவசிய சிக்கல்களோடுகூடிய நிலை உண்டாகலாம். ஆனால், தமிழ்ச்செல்வன் - ஒன்றை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருந்தார். அதாவது, வடக்கு - கிழக்கு இடைக்காலசபையில், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இறுதித்தீர்வின்போது, அந்தப் பிரதேசங்களில் வாழ்கின்ற சிங்கள, முஸ்லிம் மக்களது இனத்தனித்துவம் பாதுகாக்கப்படும் விதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அங்கு சிங்கள, முஸ்லிம் மக்கள் ஆச்சரியப்படும் விதத்தில், அந்த ஆலோசனையின் மூலம் அவர்களின் இனத்தனித்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை தமிழ்ச்செல்வன் வெளிப்படுத்தினார். வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் தமிழர் அல்லாத மக்களுக்கு எல்.ரீ.ரீ.ஈ. நிர்வாகத்தின்கீழ் வழங்கப்படுகின்ற உரிமைகளின் முன்மாதிரியைக்கொண்டு, வடக்கு-கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் சந்தர்ப்பம் வழங்கப்படும். அதே போன்று, மலைநாட்டு மக்கள் வன்னியில் வசிப்பதை நினைவுபடுத்திய தமிழ்ச்செல்வன், பரந்தளவில் தங்களது போராட்டத்தில் உதவிகளை வழங்கியது பற்றியும் கூறியுள்ளார். அந்த மக்கள் வடக்கு- கிழக்கு மக்களோடு கலந்து இருக்கின்றார்கள். இங்கு பேதங்கள் இல்லை.

**கேள்வி:** ஆயினும், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமைச்சர் பி.சந்திரசேகரன்-இடைக்கால நிர்வாக அமைப்பின் ஊடாக மலையக மக்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று தமிழ்ச்செல்வனிடம் கூறியுள்ளார். அதேபோன்று, மலையகம் பற்றி எல்.ரீ.ரீ.ஈ. கவலைப்படவேண்டியதில்லையென அமைச்சர் தொண்டமான் கூறுகின்றார். மலையகத்தின் பிரதான கட்சிகள் இரண்டினதும் இந்த நிலைப்பாட்டினை நீங்கள் எப்படி நோக்குகின்றீர்கள்?

**பதில்:** அவர்கள் இருவரும் அப்படிச் சொல்லியிருந்தால், அது ஒன்றுக்கொன்று முரண்பாடானதாகும். இந்த நாட்டில் தமிழ்மக்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வாழ்கின்றார்கள். வடக்கு - கிழக்கு, மலையகம் மற்றும் மேல்மாகாணம் என்று மூன்று பிரதேசங்களில் அவர்கள் வாழ்கின்றார்கள். மேல் மாகாண மக்களை மலையகப் பிரதேசங்களோடு இணைத்துக்கொள்ளவேண்டியதில்லை. இதில், மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். மேல்மாகாணத்தில் தமிழ்மக்கள் - சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களோடு, சிறுபான்மையினமாக ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். நாங்கள் கேட்டுக்கொள்வது அரசின் நிர்வாக அதிகாரம் பரவலாக்கப்பட்ட மற்றும் கலாசாரப் பண்பாட்டு அடிப்படையில் சுய அதிகாரம் தேவையென்பது மட்டுமே. இதனை வேறு மாவட்டமாகவோ, பிரதேசமாகவோ இனங்காண எங்களால் முடியாதிருக்கின்றது. சிங்கள மக்க ளுக்குள்ள அனைத்து உரிமைகளும் எங்களுக்குக் கிடைக்கின்றவிதமாக, எல்லாம் உறுதிப்படுத்தப்படவேண்டும். கொழும்பு மாவட்டத்தில் தமிழ்மொழி - நிர்வாக மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், அவை நடைமுறையில் செயற்படுத்தப்படுவதில்லை. பிழையாகச் செயற்படுத்தப்படுகின்றது. மேலதிக பிரதேச செயலாளர்கள் இருக்கவேண்டும். மேலதிக தமிழ் கிராம சேவையாளர்கள் இருக்கவேண்டும். இது போன்ற வேண்டுகோள்களைத்தான் எங்களது அரசியல் வேண்டுகோள்களாக நாங்கள் சமர்ப்பித்துள்ளோம். பிரதமருக்கும் இதைப்பற்றி நான் தெளிவுபடுத்தியுள்ளேன். வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளோடு, எங்களது பிரச்சினைகளையும் சிக்கலாக்கி, அவர்களுக்கு நீதியாகக் கிடைக்கக்கூடிய உரிமைகளுக்குத்தடைகளை ஏற்படுத்த நான் ஆயத்தமாக இல்லை.

**கேள்வி:** உலகின் அனைத்து தமிழ் மக்களினதும் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி. சந்திரசேகரன் ஒரு தடவை நோர்வேயில் கூறியிருந்தார். இந்த அறிக்கை தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன?

**பதில் :** நாங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உலகத்தின் அனைத்து தமிழ் மக்களும் பிரபாகரனை ஒரு மிகப்பெரிய வீரனாகவே பார்க்கின்றார்கள். சிங்கள இனவாதிகள் அதனை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆயினும், நடைமுறையில் பார்க்கும்போது, அது யதார்த்தமானதாகும். இராஜராஜ சோழன் போன்ற மன்னர்கள் பற்றி தமிழ்மக்கள் வரலாற்றுப் புத்தகங்கள்மூலம் வாசித்து இருந்ததற்கு நிகராக, அவர்கள் பிரபாகரனை மாத்திரமே கண்டார்கள். இது இரகசியமானது அல்ல.

**கேள்வி:** மலையகக் கட்சிகளை வன்னிக்கு அழைத்து, எல்.ரீ.ரீ.ஈ. கலந்துரையாடல் நடத்துவது - தங்களது பிரிவினைவாத யுத்தத்தை வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியேயும் பரப்பும்நோக்குடன் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. தற்போது நிகழ்கின்றவைகளைப் பார்க்கும்போது, அந்தக் குற்றச்சாட்டை ஒரேயடியாக மறுதலிக்க முடியாது தானே?

**பதில் :** வடக்கு - கிழக்கு, மலையகம் மற்றும் மேல்மாகாணப் பிரதேசங்களின் ஒன்றிணைந்த பரந்த கூட்டமைப்பினை உண்டு பண்ணும் எந்தவொரு தேவையும் எல்.ரீ.ரீ.ஈக்கு இல்லை. மேல்மாகாணத்தில் வாழுகின்ற தமிழ்மக்களுக்குத் தலைமை வகிப்பது நாங்களேதவிர, எல்.ரீ.ரீ.ஈ. அல்ல. மலையகம் பற்றி என்றால் எனக்குச் சொல்லத்தெரியவில்லை. மலையகத் தலைவர்கள் வெளியிடுகின்ற சில முரணான அபிப்பிராயங்களினால், அது போன்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்படமுடியும். எல்.ரீ.ரீ.ஈ யின் முழுமையான கவனமும் வடக்கு - கிழககின்மீதுதான் செலுத்தப்பட்டுள்ளது. சில மலையகத் தலைவர்களது அறிவற்றபேச்சுக்கள் - எல்.ரீ.ரீ.ஈக்குமே தீங்கானவை என்பதைச் சொல்லவேண்டும். வடக்கு - கிழக்கு மக்களது பிரச்சினைகளுக்கு விடைகாணவேண்டும் என்றால், இனமுரண்பாட்டுச் சிக்கலுக்கு நிலையான தீர்வினை சுவீகரித்துக் கொள்ளவேண்டும்.

தெற்கின் சிங்கள மக்களது முழுமையான சம்மதத்தோடுதான் அதுபோன்ற தீர்வினைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதன்பொருட்டு தேவையான சூழல் தெற்கில் இருக்கவேண்டும். மலையகத்தின் சில தலைவர்களது இது போன்ற கருத்துக்கள் - தெற்கின் சிங்கள மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும். இந்தச் செயற்பாடு பிழையான ஒன்று என்பது எனது முடிவாகும். சில அரசியல்வாதிகளது இதுபோன்ற பிழையான செயல்கள் - சமாதானச் செயற்பாடுகளுக்குத் தீங்கானதாகும்.

மலையகத்தில் யுத்தம் இல்லாதிருந்தும், அங்கு மக்களது வாழ்க்கைத்தரம் கீழான நிலையில் இருக்கிறது. அடிப்படை வசதிகள் எதுவும்இன்றி அவர்கள் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். மலையகத்தில் வைத்தியசாலைகள் இல்லை, முறையான பள்ளிக்கூடங்கள் இல்லை, அதேபோன்று, தோட்டங்களுக்குள்ளே சென்று பார்த்தால், அங்கு நிலவுகின்ற குறைபாடுகளைக் கண்டுகொள்ள முடியும். மலையகத்தின் அரசியல்வாதிகள் அதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதைவிடுத்து, இதுபோன்ற அபிப்பிராய பேதங்களை வெளிப்படுத்துவது பொருத்தமானது அல்ல.

**கேள்வி:** நீங்கள் மேல்மாகாண மக்கள் முன்னணி என்ற பெயரில் வேறொரு கட்சியை அமைத்துக்கொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவது, பிரிவினைவாதத்திற்கு உளவு பார்ப்பதன்பொருட்டே என்று சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டிற்கு நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** தமிழ்மக்கள் எதனைச் செய்தாலும் அதனைச் சந்தேகத்துடன் பார்க்கும் கூட்டத்தினர் இருக்கின்றார்கள். அவர்கள் சொல்கின்ற கதைதான், நீங்கள் இப்பொழுது கூறியது. கடந்த பொதுத்தேர்தலின்போது, ஐக்கிய தேசிய முன்னணியின் பொருட்டு கொழும்பு மாவட்டத் தில் போட்டியிட்டு, நான் 55,000 வாக்குகள் பெற்றேன். கொழும்பு மாவட்ட வரலாற்றில் தமிழ்வேட்பாளர் ஒருவர் இந்தளவு தொகையான வாக்குகள் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை. எங்களது அந்தத் தேர்தலில் என்னோடு போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்கள் இருவருமே தோற்றுப்போனார்கள். அவர்களால் 30,000 இற்குக் கிட்டிய வாக்குகளை மாத்திரமே பெற்றுக் கொள்ளமுடிந்தது.

அதைவிட, கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ்க்கூட்டமைப்பினர் பெற்றுக் கொண்ட வாக்குகள் 12,000 மாத்திரமே. இதன் மூலம் மேல்மாகாண தமிழ் மக்கள் செய்தியொன்றை வழங்கினார்கள். அதாவது, மேல் மாகாணத்தில் வேறொரு அரசியற்கட்சி ஸ்தாபிக்கப்பட்டுள்ளதனை. இதுவரை கொழும்பு தமிழ் அரசியல் மலையகக் கட்சிகளின் ஊடாகவே பரவியிருந்தது. ஆனால், இந்தத் தடவை தேர்தலினூடாக, மக்கள் மேல் மாகாணத்துக்கு வேறொரு கட்சியின் தேவையினைத் தோற்றுவித்தார்கள்.

**கேள்வி:** எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு தங்கள் இடைக்கால நிர்வகாசபை ஆலோசனைகளை அரசிடம் சமர்ப்பித்திருக்கின்றது. இது பற்றிய தங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில் :** தனிநாடு ஒன்றினைப் பற்றிப் பேசிய எல்.ரீ.ரீ.ஈ, அந்தக் கருத்துக்கு மாற்று யோசனையொன்றினை இன்று தேட நேர்ந்துள்ளது. யுத்தத்தின் காரணமாக அவர்களது அங்கத்தவர்கள் பதினேழாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மரணம் அடைந்துள்ளார்கள். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இறந்து போயுள்ளார்கள்.

**தமிழில் - வல்வையூரான்**

உள்நாடு மற்றும் சர்வதேசமட்டத்தில் அகதிமுகாம்களில் மேலும் பெருந்தொகையானவர்கள் துன்பத்தினை அனுபவிக்கின்றார்கள். இந்தப் பின்னணிகளைக் கவனத்தில் கொண்டே, நாங்கள் எல்.ரீ.ரீ.ஈ.யின் ஆலோசனைகளைப் பற்றிப் பேசவேண்டும். இந்த ஆலோசனைக ளுக்கும், தெற்கின் நிர்வாகத்தினரும் மற்றும் பொதுமக்களும் ஏற்றுக் கொள்ளமுடியாத ஆலோசனை இருப்பதென்பது உண்மை.

ஆயினும், அப்படிச்சிந்தித்து இந்தப் பிரேரணைகளைக் கிழித்துப்போடாமல், எதிர்காலச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பொருட்டு, இந்தப் பிரேரணைகளைக் கவனத்தில் எடுத்துக கொள்ளவேண்டும். அப்படி இல்லாது போனால், இந்த நாடு மீண்டும் ஒரு தடவை பயங்கர யுத்தத்திற்கு இழுத்துச்செல்லப்படுவதை யாராலும் தடுக்கமுடியாமற் போய்விடும்.

# ஜே.வி.பி.யின் மக்கள் சந்திப்பு நேற்று முதல் ஆரம்பமாகியது!

## எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடக்குமாம்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி நேற்று முதல எதிர்வரும் 15ஆம் திகதிவரை நாடு முழுவதும் பத்தாயிரம் மக்கள் சந்திப்புக்களை நடத்தவுள்ளதாக முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் நாட்டைச் சரியான பாதைக்கு இட்டுச்செல்ல எம்முடன் இணையுங்கள் என்ற தொனிப்பொருளில் இந்த மக்கள் சந்திப்புகள் நடைபெறவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிப்பதற்காகவே, இந்த மக்கள் சந்திப்புக்கள் நடத்தப்படுகின்றன.

இந்தச் சந்திப்புகளில் மக்கள் விடுதலை முன்னணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர். இதன்போது, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த 20 இலட்சம் துண்டுப்பிரசுரங்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உயிரியல் ஆசிரியர்ளுக்கான கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உயிரியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்விச் சுற்றுலாவொன்று, டிசம்பர்மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வகை உயிரினங்களையும், தாவரங்களையும் பற்றி மேலதிக தகவல்களைப் பெறும் நோக்குடன் சிங்கராஜவனம், பேராதனைப் பூங்கா போன்ற இடங்களுக்கு ஆசிரியர்கள் செல்லவிருக்கின்றனர்.

இதற்கான ஒழுங்குகளைத் தெண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் விஞ்ஞானப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (101)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ் மாவட்டதிற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

## 1. சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்)

## 2. அரிசி (தீட்டல் பச்சை)

# வழங்கலுக்கான கேள்வி கோரல்

1. யாழ் மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004, சனவரி, பெப்ரவரி,' மார்ச் ஆகிய மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை (1) சிவப்பு நாட்டரீசி (2) தீட்டல்பச்சை அரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும், வழங்கீடு செய்யப்பட வேண்டியதொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் அந்தந்த மாதங்களில் அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2004 சனவரி | | 2004 பெப்ரவரி | | 2004 மார்ச் | |
| | | சிவப்பு நாடு (MT) | தீட்டல் பச்சை (MT) | சிவப்பு நாடு (MT) | தீட்டல் பச்சை (MT) | சிவப்பு நாடு (MT) | தீட்டல் பச்சை (MT) |
| 1. | சாவகச்சேரி | 152 | 65 | 152 | 65 | 152 | 65 |
| 2. | கைதடி | 70 | 30 | 70 | 30 | 70 | 30 |
| 3. | கொடிகாமம் | 135 | 60 | 135 | 60 | 135 | 60 |
| 4. | உடுப்பிட்டி | 32 | 08 | 32 | 08 | 32 | 08 |
| 5. | கட்டைவேலி நெல்லியடி | 45 | 15 | 45 | 15 | 45 | 15 |
| 6. | பருத்தித்துறை | 114 | 45 | 114 | 45 | 114 | 45 |
| 7. | புலோலி | 27 | 08 | 27 | 08 | 27 | 08 |
| 8. | மருதங்கேணி | 80 | 30 | 80 | 30 | 80 | 30 |
| 9. | யாழ்ப்பாணம் | 311 | 125 | 311 | 125 | 311 | 125 |
| 10. | நல்லூர் | 161 | 55 | 161 | 55 | 161 | 55 |
| 11. | அச்சுவேலி | 154 | 60 | 154 | 60 | 154 | 60 |
| 12. | நீர்வேலி | 148 | 58 | 148 | 58 | 148 | 58 |
| 13. | மானிப்பாய் | 131 | 52 | 131 | 52 | 131 | 52 |
| 14. | பண்டத்தரிப்பு | 90 | 40 | 90 | 40 | 90 | 40 |
| 15. | அளவெட்டி மல்லாகம் | 64 | 27 | 64 | 27 | 64 | 27 |
| 16. | தெல்லிப்பளை | 150 | 63 | 150 | 63 | 150 | 63 |
| 17. | சங்கானை | 183 | 72 | 183 | 72 | 183 | 72 |
| 18. | சுன்னாகம் | 196 | 75 | 196 | 75 | 196 | 75 |
| 19. | புங்குடுதீவு, நயினாதீவு | 40 | 15 | 40 | 15 | 40 | 15 |
| 20. | வேலணை | 50 | 25 | 50 | 25 | 50 | 25 |
| 21. | ஊர்காவற்துறை | 70 | 30 | 70 | 30 | 70 | 30 |
| 22. | காரைநகர் | 55 | 25 | 55 | 25 | 55 | 25 |
| 23. | தீவகம் | 12 | 05 | 12 | 05 | 12 | 05 |
| 24. | நெடுந்தீவு | 30 | 12 | 30 | 12 | 30 | 12 |
| | மொத்தம் | 2500 | 1000 | 2500 | 1000 | 2500 | 1000 |

2. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்விவைப்பாக ரூபா 500/= ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2003-12-03 ஆம் திகதி தொடக்கம் 2003-12-17 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களை பொறுத்தவரை அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.
3. மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகங்களில் செலுத்தி, அரசாங்க அதிபர்களிடம் இருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்வி கோரப்படவுள்ள அரிசி (1) சிவப்பு நாடு புழுங்கல் அரிசி (2) தீட்டல்பச்சை அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.
5. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்ளை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003-12-18 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் (1) சிவப்பு நாடு மாலை 3.00 மணிக்கும் (2) தீட்டல் பச்சை மாலை 4.00 மணிக்குமாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
6. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் (1) "சிவப்பு நாட்டு புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி", (2) "தீட்டல் பச்சை அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.
7. கேள்வி காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.
8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுதல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
9. கேள்விகள் பரிசீலினை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.
10. சிவப்பு நாட்டரிசிக்கு தனியான கேள்வி விண்ணப்பப் படிவமும், தீட்டல் பச்சை அரிசிக்கு தனியான விண்ணப்பப் படிவமும் பெற்று தனித்தனியான கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். இரு கேள்விப் பெட்டிகள் தனித்தனியாக வைக்கப்பட்டிருக்கும்.

**செ. பத்மநாதன்,**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
2003.12.02

(சி/1857)

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

தமிழ்மொழிமூல ஆசிரிய சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்களுக்கே ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் - விண்ணப்பப் படிவங்களை புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளமுடியும். போட்டிப் பரீட்சை ஒன்றின்மூலமே இவ்வாசிரியர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

பரீட்சைகள் யாவும் கொழும்பிலேயே நடைபெறுமென பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.(ச)

## பரீட்சைக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்

தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் ஏழாவது பிரிவு சான்றிதழ் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளதால், தங்கள் பரீட்சைக்கான பதிவினை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் உறுதிப்படுத்துமாறு மாணவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## மன்னார் செயலகத்தில் புனரமைப்பு கலந்துரையாடல்

மன்னாரில் புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான செயற்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பான கலந்துரையாடல்- மன்னார் கச்சேரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வன்னி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர் மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் மற்றும் அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள், கிராம அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஆண்டு முடிவிலான புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவே, இந்தக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

## ஐஸ்கிறீம் வான் சாரதியை கைதுசெய்ய உத்தரவு

ஐஸ்கிறீம் வான் ஒன்றினால், குடும்பஸ்தர் ஒருவர் மோதிக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, வான் சாரதியைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு, நீதிபதி இ.த.விக்னராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம், நீர்வேலியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் கோப்பாயைச் சேர்ந்த இளையப்பு கோபாலசிங்கம் (வயது 57) என்பவரே மரணமானவராவார். இவரை மோதிக்கொன்ற ஐஸ்கிறீம் வான் சாரதி தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் - நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றபோது, அப்பகுதி கிராம சேவகர் மன்றில் ஆஜராகி இந்தச் சம்பவத்தைத் தமது உறவினர் ஒருவர் நேரில் கண்டதாகத் தெரிவித்தார்.

இதனைச் செவிமடுத்த நீதிபதி- சம்பவத்தை நேரில் கண்ட குடும்பஸ்தரை நீதிமன்றில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க உத்தரவிட்டார். இது தொடர்பான வழக்கு விசாரணையை, கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தி வருகின்றனர். (ச)

## நகைகள் திருட்டு

புலோலி தெற்கு சாந்தா தோட்டத்தைச் சேர்ந்த இ.பொன்னுத்துரை என்பவர் வீட்டில் கடந்த 18 ஆம் திகதி ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் 15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை களவாடிச் சென்றுள்ளனர். (17)

## விக்கிரகம் திருட்டு

தென்புலோலி முதலியம்மன் ஆலயத்திலுள்ள கருங்கல்லினாலான பிள்ளையார் சிலையினை, கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாக, ஆலய பரிபாலன சபைத் தலைவர் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (17)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## திருகோணமலை-கிண்ணியா சம்பவங்கள்
# அம்பாறையில் பரவுவதை தடுக்க முத்தரப்பு சந்திப்பு நடைபெற்றது!

(திருகோணமலை)

திருகோணமலை - கிண்ணியாப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள், அம்பாறை மாவட்டத்திற்கும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக விடுதலைப் புலிகள், படையினர், முஸ்லிம்கள ஆகிய முத்தரப்புக்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்று நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான கூட்டம் மாலை 2 மணிவரை இடம்பெற்றது.

கண்காணிப்புக்குழுவின் அம்பாறை மாவட்டத் தலைவர் பெரியர் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் - புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் படைத் தரப்பில் விசேட அதிரடிப்படையின் அம்பாறை மாவட்ட கட்டளை அதிகாரி உபுல் செனவிரத்ன, அக்கரைப்பற்று பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.ஐ.எம்.புகாரி ஆகியோரும், அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனத் தலைவர் ஐ.எம்.இப்ராஹிம், கண்காணிப்புக் குழுவின் உள்ளூர் கண்காணிப்பாளர்களான சண்முகநாதன், ஏ.ஆர்.ஏ.அஸீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் - திருகோணமலையில் ஏற்பட்ட சம்பவங்களைப் போன்று அம்பாறை மாவட்டத்தில் நடைபெற அனுமதிக்கக் கூடாதெனவும், இந்த விடயத்தில் அம்பாறை மாவட்டம் ஏனைய மாவட்டங்களுக்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டதுடன், மக்கள் வீணாக அச்சமடையாமல், ஒற்றுமையாக வாழவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.(07)

### 350 பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் பயிற்சி முடிந்து வெளியேற்றம்

களுத்துறை பொலிஸ் பயற்சி கல்லூரியில் பயிற்சி முடித்த 350 கொன்ஸ்டபிள்கள் நேற்று சேவையில் இணைந்து கொண்டதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பயிற்சி முடித்து வெளியேறிய கொன்ஸ்டபிள்களின் அணிவகுப்பு மரியாதையை பதில் பொலிஸ் மா அதிபர் இந்திர டீ சில்வா ஏற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி இயக்குநர் ஆனந்த ஹெட்டியாராட்சியும் கலந்துகொண்டார்.

## நாற்சந்தி

"என்ன மணியம் காலமை எழும்பி கோயிலுக்கு இந்தக் குளிரிலை போட்டு வாறாய் போலக்கிடக்கு..."

"ஓமோம் கனகர்... எங்கடை வீட்டிலை இருந்து ஒரு பொருள் களவு போட்டுது அதுதான்... அது கிடைச்சா மோதக பூசை ஒண்டு வைக்கிறன் எண்டு அரசடிப் பிள்ளையாரிட்ட நேர்த்தி வைச்சிட்டு வாறன்.

'அதென்ன உன்ரை வீட்டிலை களவு போன பொருள் மணியம்'

'அதையேன் கேட்கிறாய் மூண்டு நாள் அடுத்தடுத்து மூண்டு பொருள் களவு போட்டுது... கனகு, முதல் நாள் வெள்ளடியன் சாவல் ஒண்டு காணாமல் போட்டுது... இது புதன் நடந்தது; பிறகு வியாழன் வீட்டிலை நிண்ட பொமேரியன் நாயைக் காணேல்ல.... இண்டைக்கு விடிய வாசல்லை கிடந்த, நேற்றுத்தான் புதிசா வாங்கின செருப்பைக் காணேல்ல... எனக்கெண்டா ஒண்டுமா விளங்கேல்ல...'

'அதைப் போய் பிள்ளையாரிட்ட சொல்லி என்ன செய்யப்போறாய்... இதையெல்லாம் எடுத்தவன் கொண்டுவந்தே தரப்போறான்...சேவலைச் சாப்பிட்டிருப்பான், நாயைத் தூரக்கொண்டுபோய் ஆருக்கும் வித்திருப்பான், செருப்பைக் கொண்டுபோய் ஒளிச்சு வைச்சிட்டு பிறகு கொஞ்சக் காலம் செல்ல புதுசாய்ப் போட்டுக்கொண்டு திரிவான்.... நீ என்ன செய்யமுடியும்?

'கடைசி கள்ளனை கடவுள் அடையாளமாவது காட்டித்தரட்டுமே என்றுதான் நேர்த்தி வைச்சனான்...எதுக்கு அங்கை பார் காளி கோயில் ஐயரே வாறார்... அவரிட்டை சாத்திரம் கேட்டுப்பார் ஆள் ஞானத்தில சொன்னாலும் சொல்லுவார்...'

"வாங்க ஐயரே எங்கை வேர்க்க விறுவிறுக்க இந்தக் காலம்பற நேரத்தில நடந்து போறீங்க...?"

'பொலிஸ் ஸ்ரேசனுக்கு மணியம்'

'ஏன் என்ன நடந்தது ஐயரே...?'

'எங்கடை கோயில்ல இருந்த எழுந்தருளி அம்பாளை யாரோ ராத்திரி களவெடுத்திட்டாங்க... அதுதான் என்றி போடப்போறன்'

-தெருவாசி

## புலிகளின் திட்டவரைபு...

இவை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஒரு அடித்தளமாகவே அமைநதுள்ளன.

விடுதலைப் புலிகளின் திட்ட யோசனை - அரசாங்கத்தின் யோசனையுடன் ஒப்பிடும்போது வேறுபட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதனூடாக, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிக்குப் புதியதொரு அடித்தளத்தை இட்டுள்ளது.

இரு வருடங்களாக பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்படுத்திய சமாதானப் பேச்சுக்கான மூலதன சக்தி, ஒரு வருடத்திற்குள் ஐக்கிய தேசிய முன்னணி அரசால் ஏற்படுத்தப்பட்டது. இதனை அறிக்கைகள் ஊடாக அறிந்துகொள்ளமுடியும் எனவும் மிலிந்த மொறகொட தெரிவித்தார். (01)

## கிண்ணியா நிலைவரங்கள்...

மேஜர் அத்தப்பத்து ஆகியோருடன் சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் கேட்ஸ்பர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களாவன -

ஏற்கனவே கூட்டு இணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் கிண்ணியாவின் பிரச்சினைகளைக் கையாள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கூட்டு இணைப்புக் குழுவில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாததனால் அது தொடர்ந்து இயங்கமுடியாது போயுள்ளது.

எனவே, திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள் அடங்கலாக கூட்டு இணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கிண்ணியா பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு இரண்டு நாட்களுக்கு சமைத்த உணவும், இரண்டு வாரங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் திருமலை மாவட்ட அரச அதிபர் உடன்பட்டுள்ளார். அத்துடன், தற்போதைய பிரச்சினையை உடன் தீர்க்க வேண்டுமெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றைய கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் எவரும் அழைக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் திருமலை மாவட்டத்தில் தற்போது பாதுகாப்பைப் பலப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக படைத் தளபதிகள் நேற்று சபாநாயகர் கூட்டிய கூட்டத்தில் தெரிவித்தனர்.

கிண்ணியா நிலைமைகள், அங்கு முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பகல் நாடாளுமன்ற கூட்டத்தில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

நேற்று கிண்ணியாப் பகுதியில் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லையாயினும் நேற்று இரவு 8 மணியிலிருந்து இன்று காலை 6 மணிவரை மூதூர் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (04,10)

## திருமலையில் தொடரும் சம்பவங்களுக்கு...

ளிலும் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலைமை, முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள், உயிரிழப்புகள் இவற்றிற்கெல்லாம் அரசாங்கமே பொறுப்பாகும். இந்தப் பொறுப்பிலிருந்து அது தப்பித்துக்கொள்ள முடியாது.

அரசாங்கம் மிகவும் இலகுவாக மூன்றாம் தரப்பு ஒன்று இவற்றிக்குக் காரணமாக இருப்பதாகக்கூறி தம்முடைய பொறுப்பிலிருந்து விலகி விடமுடியாது. இதனை தங்களுக்குச் சாதகமான ஒன்றாகப் புலிகளும் பாவித்து, அவர்களும் இப்பொழுது மூன்றாம் தரப்பு ஒன்று ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டிக்கொண்டுஇருக்கிறார்கள். இது ஒரு கேள்விக்குரிய விடயம். முஸ்லிம்களை மூன்றாம் தரப்பாகப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள அனுமதிக்காமல், வேண்டுமென்றே முஸ்லிம்களின் உரிமையைப் பறித்திருப்பதுதான் முஸ்லிம்கள் மத்தியில் இப்பதற்றத்திற்குக் காரணமாகும்.

கண்காணிப்புக் குழுவினரால் யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் புலிகள் மீறியுள்ளனர் எனச் சொல்லப்பட்டும் குரங்குபாஞ்சான் முகாம் குறித்து அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பொழுது பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னரும் அதனைப் பற்றிக் கவனத்தில் எடுக்கவில்லை.

மாறாக, முஸ்லிகள் ஆயுதம் ஏந்தத் தொடங்கியிருக்கிறார்கள் என்று இருக்கின்ற விடயத்தை இன்னும் சிக்கல்படுத்தும் அறிக்கையை ஜனாதிபதி விடுத்துக்கொண்டிருக்கிறார். முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டுகொண்டிருக்கின்ற இந்தப் பதற்றச்சூழல், முஸ்லிம் இளைஞர்களைத் தீவிரவாதத்தின் பக்கம் தள்ளிக்கொண்டிருக்கிறது என்பதனை நாம் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

உடனடியாக, இப்படியான நிலைமை தோன்றாமல் இருப்பதனைத் தடுப்பதற்கு, அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்று, முஸ்லிம்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்தியாகவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆணையிட்டு யார் தடுத்தாலும் அலைகடல் ஓய்ப்போவதில்லை
ஆயிரம் கை ஓங்கினாலும் சூரியன் மறையப்போவதில்லை

கணக்கீடு
திரு.பாலவாசன்

கோண்டாவில் பகுதியில் நடைபெறுகின்ற எனது அனைத்து வகுப்புகளும் 03.12.2003 புதன்கிழமையிலிருந்து நிரு கல்வி நிலையத்தில் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.
(539)

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1569 திகதி: 02.12.2003

வெற்றி இலக்கங்கள்

| B | 2 | 0 | 2 | 6 | 2 | 5 |
|---|---|---|---|---|---|---|

2004 அனுமதிக்கான
யாழ் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பித்தவர் கவனத்திற்கு

க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்திரத்தை ஒரு பாடமாகக் கொண்டு சித்திபெற்று, கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் இன்று காலை 8.00 மணிக்கு யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு முன்பாக ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
(540) பாதிக்கப்பட்ட மாணவர்கள்

## இராணுவக்...

யாகப் பதவிவகித்த மேஜர் ஜெனரல சரத் பொன்சேகா தொண்டர் படைத் தளபதிப் பதவிக்கு மேலதிகமாக இராணுவப் பயிற்சி இயக்குநராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வன்னிப் பிராந்தியத்துக்கான புதிய படைத்தளபதியாக மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரியவும், பட்டலந்த இராணுவப் பயிற்சிக் கல்லூரி கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சீவன விஜேசேகரவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நியமனங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளன.

கடந்த மாதம் நான்காம் திகதி பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்ற பின்னர் - இராணுவத்தின் பிரதான கட்டளை அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டன. கடந்த மாத நடுப்பகுதியில் இடம்பெற்ற இந்த மாற்றங்களை அடுத்து மீண்டும் கட்டளை அமைப்பில் மாற்றங்கள் - குறுகிய காலத்திற்குள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கள..

எதிராகப் இராணுவத்தில் இணைந்து போராட தற்கொலைப்படை ஒன்றை அமைக்கப் போவதாகவும், சிஹல உறுமய எச்சரிக்கைகளை விடுத்து வந்ததும் குறிப்பீடத்தக்கது.

## பொதுத்தேர்...

பெற்றுக்கொண்டு, சமாதான முயற்சியைத் தொடர்வதற்கு, பொதுத் தேர்தல் ஒன்று அவசியமென வலியுறுத்தப்பட்டதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. (01)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.